ISSN 2021-9041

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

ආසියම්

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

இதழ் 15 யூலை 2012 ரூபா 100/-



## தனியார் போதனைத் தொழில்...


## கல்வித் தலைமைத்துவம்

## ஆசிரியர் அறிவும் வகுப்பறைச் செயற்பாடுகளும்

சோ.சந்திரசேகரன்/ சபா.ஜெயராசா / மா.கருணாநிதி/ ந.அனந்தராஜ்
கி.புண்ணியமூர்த்தி/ வேலும் மயிலும் சேந்தன்/ ஏ.எல்.நௌபீர்
த.மனோகரன்/ அன்பு ஜவஹர்ஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் 2012 முதல் வெளிவருகிறது...!




ஆசிரியர்:
பொ.ஐங்கரநேசன்

விலை: ரூபா.60.00

தொடர்புகளுக்கு:
பதிவாளர் ஒழுங்கை
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்
தொ.பேசி: 0777-969644
மின்னஞ்சல்:nankkoorum@yahoo.com

# 2012 முதல் புதிதாக வெளிவருகிறது...!

ஆசிரியர்:
தெ.மதுசூதனன்

விலை: ரூபா.200.00

தொடர்புகளுக்கு:
11/8, பண்டாரிக்குளம்
மேற்கு ஒழுங்கை
நல்லூர் வடக்கு
யாழ்ப்பாணம்
தொ.பேசி:075-0710602/ 077-1381747




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

சர்வதேசப் பரீட்சைகளில் கிழக்காசியா... 04

கல்வித் தலைமைத்துவம் 07

ஆசிரியர் அறிவும் வகுப்பறை... 10

பாடசாலைகளை வினைத்திறன் 15

பாடசாலைகளின் விளைதிறன் விருத்தியில் 21

உள்ளடங்கல் வகுப்பறை: மாணவர்களுக்கான ... 26

புறந்தள்ள முடியாத தனியார் போதனைத் தொழில் 28

தொழில்நுட்பக் கல்லூரிகளில் புறக்கணிக்கப்பட்டுள்ள... 35

நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்... 38

**'ஆசிரியம்'**

தொடர்புகளுக்கு : தெ.மதுசூதனன் – 077 1381747 / 011 2366309/ 021 2227147
காசுபதி நடராஜா – 0777 333890
மர்சூம் மௌலானா – 077 4747235
அ.ஸ்ரீகாந்தலட்சுமி – 0777 286211

படைப்புகள் அனுப்ப : *aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

பணம் அனுப்ப : Chemamadu book centre - BOC Bank - A/C- NO :8081150
Chemamadu book centre - COM Bank - A/C- NO:1120017031

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூலை 83

### உணர்வும் பகிர்வும்

இலங்கை வரலாற்றில் "யூலை 83" ஒரு பிரிநிலைக் காலப்பகுதியாகவே அமைந்துள்ளது. 83க்கு முன், பின் என கூறுபடுத்தி சிந்திக்கும் மரபு உருவாகியுள்ளது. தமிழ்பேசும் மக்கள் வாழ்புலத்தில் அரசியல் விழிப்புணர்வுடன் இயங்குவதற்கான சாதகமான சூழமைவு உருவானது. தனிநபர் வாழ்வில் மட்டுமல்ல கூட்டுமொத்த தமிழர் வாழ்வியலிலும் பெரும் தாக்கம் செலுத்திய காலம் இது எனக் கூறலாம்.

இளந்தலைமுறையினர் தமது படிப்புகளை பாதியில் விட்டு வீட்டைத்துறந்து அரசியல் இராணுவ செயற்பாடுகளில் ஈடுபட தொடங்கினர். இன்னும் பலரை நாட்டை விட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு அகதியாகத் துரத்தியது. நெருக்கடிகளின் அழுத்தங்கள் இழப்புக்கள் வரன்முறையான கல்வி முறைமையிலிருந்து மாணவர்கள் இடைவிலகிச் சென்றனர். ஆற்றலும் தகுதியும் மிக்க மாணவர் தலைவர்களை கல்விச் சமூகம் இழந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இளந் தலைமுறையினர் ஆசிரியர், மாணவர் எனும் வேறுபாடின்றி கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலைகளில் வாழ்ந்து வரவேண்டிய கொடுமையும் ஏற்பட்டது. இன்னும் பலர் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். பல தமிழ்க் கிராமங்களில் தந்தையை சகோதரனை இழந்து குடும்பம் தத்தளித்தது. கணவர்களை இழந்த விதவைகள் உருவாகினர்.

ஒடுக்குமுறை பல்வேறு வழிகளிலும் உறுதியாகி வருகின்றபோது ஒடுக்கப்படும் மக்களுக்கு தமது கலைகள், பண்பாடு, நிலம் எல்லாவற்றிலும் மிகுந்த நெருக்கமான பிணைப்புகள் வலிமைபெறும். இதனால் ஒடுக்குமுறைக்கு எதிராக விடுதலைப் போராட்டம் கிளர்ந்தெழுகையில் அக்கிளர்ச்சி தேசத்தின் பல்வேறு அம்சங்களையும் தழுவியதாகவே இருக்கும். இதற்கு தமிழ்கல்வி முறைமையும் உட்பட்டுதான் உள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள இழப்புகள், வலிகள், சுமைகள் யாவும் தமிழ்க் கல்வித்தர அபிவிருத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது என்பது பற்றிய புரிதல், விளக்கம் தமிழ் தரப்பினருக்கு இல்லையென்றே கூறலாம். அந்தளவிற்கு

Aasiriyam

ஆசிரியம்

ISSN 2021-9041

மாத இதழ் – 15

**ஆசிரியர் :**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா
காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**
பேரா.க.சின்னத்தம்பி
பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன்
பேரா.எம்.ஏ.நுஃமான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**
சுந்தரம் டிவகலாலா
சி.தண்டாயுதபாணி
அன்பு ஜவஹர்ஷா
வல்வை ந.அனந்தராஜ்
த.மனோகரன்

**ஆலோசகர் குழு :**
பேரா.மா.கருணாநிதி
பேரா.மா.சின்னத்தம்பி
பேரா.மா.செல்வராஜா
முனைவர் த.கலாமணி
ஆய்வாளர்.தை.தனராஜ்
முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்
முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்
செ.அருண்மொழி
சு.முரளிதரன்
பொ.ஐங்கரநேசன்
ஓ.எல்.எம்.அஸ்ஹர்

**நிர்வாக ஆசிரியர் :**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**
வை.கோமளா

**Printed by: cbc prees**, Tel : 0777 345 666

தொடர்புகளுக்கு : "Aasiriyam" 180/1/50 People's Park, Colombo-11 Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com, Web:www.chemamadu.com/aasiriyam.aspx



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கவும் செயற்படுவதற்குமான கல்வித் தலைமைத்துவம் சிதைக்கப்பட்டுள்ளது.

அப்படி அதையும் மீறி கல்வித் தலைமைத்துவத்தில் உட்கார்ந்திருப்பவர்களுக்கு கல்வியும் தலைமைத்துவமும் தனித்தனியாக உள்ளது. இவர்கள் அதிகார அரசியலை உறுதிப்படுத்தும் நெளிவு சுழிவுகளை விளங்கிக் கொண்டவர்களாக உள்ளனர். இதற்காக எந்த எல்லை வரையும் சென்று அரசியல் அதிகாரத்தை நக்கிப் பிழைக்கவும் தயாராக இருப்பவர்கள். இன்று தமிழ்ப் பிரதேசத்து கல்வி நிர்வாகம் மற்றும் அதிபர்கள் மட்டத்தில் இந்தப் பண்பாடு மேலாட்சி பெற்றுள்ளது. இவர்கள் தான் தமிழ்க் கல்வியின் தர உறுதிப்பாட்டை அபிவிருத்தியை தீர்மானிப்பவர்கள்?

கற்றல் கற்பித்தலை வினைத்திறனுடன் முன்னெடுத்தலும் அறிவைத் தேடுதலும் கையளிப்புச் செய்தலும் கல்விசார் ஆற்றுகைகளை முன்னெடுத்தலும் கல்வித் தலைமைத்துவத்தில் உள்ளடங்குகின்றன. கல்வித் தலைமைத்துவம் வாண்மை சார்ந்ததாக இருக்குமேயன்றி அதிகாரம் சார்ந்ததாக இருக்காது. மாணவர்களது ஒவ்வொரு திறன்களையும் ஒவ்வொரு ஆற்றல்களையும் கீழிருந்து மேல்நோக்கி உயர்த்துவதாக கல்வித் தலைமைத்துவம் அமையும்.

தமிழ்ச் சூழலில் கல்வித் தலைமைத்துவம் பற்றிய அறிவும் விழிப்புணர்வும் தெளிவாக இல்லை. இதனால் காலனித்துவக் காலத்தில் உருவான நிருவாகக் காலனிய மனப்பாங்கு இன்று புதிய வடிவங்களில் எழுச்சி பெற்றுள்ளது. எம்மிடையே சமூக மாற்றத்தை விளைவிக்கும் கல்வித் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தும் பண்பாடு அறவே இருக்கவில்லை. இந்தக் குழப்பமான அரசியல் சூழல் பின்கதவு அரசியலை முன்னெடுப்பதற்கு கல்வி நிர்வாகிகளுக்கு சாதகமான சூழலை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

மாணவர்களிடத்து தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கு ஆசிரியர்களிடத்து மற்றும் அதிபர்களிடத்து தலைமைத்துவப் பண்புகள் மேலோங்கி இருத்தல் வேண்டும். கலைத்திட்டச் செயற்பாடுகள் அனைத்தையும் வினைத்திறன் படுத்தியும் ஒருங்கிணைத்தும் ஆசிரியர் மேற்கொள்ளும் மற்றும் அதிபர் கண்காணிக்கும் நடவடிக்கைகள் யாவும் மாணவரின் ஆளுமைப் பரிமாணங்களை வளம்படுத்தும். இதனைக் குவியப்படுத்தியே பாடசாலைக் கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும்.

கலைத்திட்டத்தின் வழியாக தலைமைத்துவத்தை வளர்க்க உடல்விருத்தி, உளவிருத்தி, மனவெழுச்சி விருத்தி, மொழிவிருத்தி, சமூகவிருத்தி, ஒழுக்கவிருத்தி முதலான துறைகளிலே கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இன்றைய நடைமுறையில் இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்தோ அல்லது புரிந்தோ செயல்படுவதற்கான பொருத்தமான ஆளணி எம்மிடையே குறைவாக உள்ளது. தொடர்ந்து எம்மிடையே உள்ள அனைத்துப் பலவீனங்களுக்கும் அறியாமைக்கும் வறுமைக்கும் போர்ச் சூழலை ஒரு காரணமாகக் கூறி அனைத்தையும் தட்டிக்கழித்துச் செல்வது அல்லது பாராமுகமாக இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். இது பொறுப்பான பணியாகவும் முடியாது.

குறிப்பிட்ட ஒரு சூழமைவில் ஒருவர் எவ்வாறு சிந்திக்கின்றார்? எவ்வாறு மனவெழுச்சிக் கொள்கின்றார்? எவ்வாறு தொழிற்படுகின்றார்? என்பதை அவரது உளப் பாங்குடன் தொடர்புடைய இயக்கங்களாகக் கொள்ளப் படுகின்றன. ஆனால் தமிழ்க் கல்விச் சூழலில் இயக்கங் கொள்ளும் உளப்பாங்கு எப்படிப்பட்டது? என்பதை இன்னும் தெளிவாக அடையாளங் காண முடியாமல் தான் உள்ளது.

இன்று ஆசிரியருக்கு பொறுப்புக்கூறும் செயற்பாடு படிப்படியாக அதிகரித்து வருகின்றது. கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கு வேண்டிய நூல்கள், கருவிகள், சாதனங்கள் போன்ற வளங்களை வழங்காது ஆசிரியர்கள் கூடியளவு பொறுப்புக்கூறக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆசிரியர் தமக்குரிய தற்படிமத்தை மேலோங்கச் செய்யும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியுள்ளது. குறிப்பாக தமது அறிவாற்றல்களை தொடர்ந்து பெருக்கிக்கொள்ளல், புலமை வலுவை உருவாக்கிக்கொள்ள ஆளுமையையும் தலைமைத்துவப் பண்புகளையும் உயர்த்திக்கொள்ளல், விடுப்புக்களை தவிர்த்து பாடசாலை நேரத்தை உச்சப் பயன்பாட்டுக்கு உள்ளாக்குதல், கற்பித்தலை விடாமுயற்சியுள்ள செயற்பாடாக மேற்கொள்ளல், கற்பிக்கும் ஆற்றலும் உற்சாகமும் வீழ்ச்சியடையாதிருக்குமாறு பார்த்துக்கொள்ளல் முதலான நடவடிக்கைகளில் இறங்கும் பொழுது தான் உயிர்ப்புள்ள ஆசிரியராக வாண்மைத்துவ தொழிலைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

***


இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் "கடந்த காலத்துப் பயங்கரங்களை மூடி மறைத்து திரை ஒன்று போட்டுக்கொள்ள வேண்டும். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் என்று சொன்னார் வின்ஸ்டன் சர்ச்சில்." "அதேசமயம் அமெரிக்க தத்துவ அறிஞரான ஜோர்ஜ் சான்டாயனா பழையதை மறப்பவர்கள் அவற்றை மீண்டும் செய்யக்கூடியவர்கள் என்று கூறினார்." அவர் சொன்னதைப் பலரும் மேற்கோள் காட்டி பேசுவதுண்டு.

இருபதாம் நூற்றாண்டில் வேதனைமிகுந்த வரலாற்றை அனுபவித்த நமக்கு அந்த இரண்டு கூற்றுகளில் எது பயனுடையது? நாம் என்ன செய்ய வேண்டும்? பழையதை மறக்க வேண்டுமா? மறக்காமல் நினைவில் வைத்திருக்க வேண்டுமா? இந்த கேள்விகளும் இதன் பின்னால் உள்ள உணர்வுகளும் சிந்தனைகளும் நமக்கு மிகவும் நெருக்கமானவை. பெரும் போரியல் வாழ்முறைக்குள்ளிருந்து நாம் மீண்டு வந்திருக்கிறோம். அந்த வகையில் நாம் இன்னும் உரத்துச் சிந்திப்பது தவிர்க்க முடியாது.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# சர்வதேசப் பரீட்சைகளில் கிழக்காசிய நாடுகள் முன்னிலை

சோ.சந்திரசேகரன்

பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பவற்றில் பல நூற்றாண்டுகளாக ஐக்கிய அமெரிக்காவும் மேற்கைரோப்பிய மற்றும் ஸ்காந்திநேவிய நாடுகள் முன்னிலை வகித்து வந்துள்ளன. இதனால் அவை அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகள், செல்வந்த நாடுகள் என அழைக்கப்படலாயின. இன்று வளர்ச்சி பெற்றுவரும் அறிவுப் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையிலும் இந்நாடுகள் உலகில் முதன்மை நிலையைப் பெற்றுள்ளன. முழுமையான வளர்ச்சிக்கு வழங்கப்படும் புள்ளிகள் 10 என்றால் இந்நாடுகள் 9 புள்ளிகள் வரை பெற்றுள்ளன. வளர்முக நாடுகள் பெறும் புள்ளிகள் 3-4 மட்டுமே. இவ்வாறான மதிப்பீட்டை உலக வங்கியின் ஆய்வு நிறுவகம் செய்து வருகின்றது.

ஆயினும் புதிய நூற்றாண்டில் முற்பகுதியில் கீழைத்தேய நாடுகளான சிங்கப்பூர், தென்கொரியா, தைவான் முதலிய நாடுகளும் பொருளாதாரம் மற்றும் கல்வித்துறைகளில் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றன. பிரதானமாக அவை வாசிப்பு, கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகளில், உயர்ந்த புள்ளிகளைப் பெறும் 10 நாடுகளுக்குள் இடம்பெற்று வருவது ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்வாறான சர்வதேசப் பரீட்சைகள் புதிய நூற்றாண்டின் சர்வதேசக் கல்வியில் எழுந்துள்ள ஒரு பிரதான போக்காகும்.

தேசியப் பரீட்சைகள் பற்றி யாவரும் அறிவர். இங்கு நடைபெறும் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் தேசியப் பரீட்சைகளுக்கான உதாரணங்களாகும். இதற்கும் அப்பால் இன்று கல்வித்துறையில் முன்னேறியுள்ள நாடுகள் தமது மாணவர்களின் கல்வித் தராதரங்கள் சர்வதேச தராதரங்களை எட்ட வேண்டும் எனக் கருதுகின்றன. இதனால் பொருளாதாரத் துறையில் சர்வதேச நாடுகளுடனான தமது போட்டித் தன்மையை அதிகரித்துக்கொள்ள பல உலக நாடுகள் விரும்புகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கீழைத்தேய நாடுகள் இவ்வாறான சர்வதேசப் பரீட்சைகளில் போட்டியிட்டு முன்னேறிய மேலைத்தேய நாடுகளைத் தோற்கடித்தும் வருகின்றன. இத்தகைய பின்புலத்தில், கீழைத்தேய நாடுகளில் உள்ள மாணவர்கள் கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் உயர்தேர்ச்சி பெறுவதற்கான காரணங்களை ஆராயும் முயற்சியில் மேலை நாடுகள் ஈடுபட்டுள்ளன. அதற்கான பல ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் கீழைத்தேய நாடுகள் (ஜப்பான் உட்பட) மேலை நாடுகளின் கல்வி முறைகளின் சிறப்பம்சங்களைக் கண்டறிய முற்பட்டன. பொருத்தமானவற்றைத் தமது நாடுகளின் கல்விமுறைகளில் அறிமுகம் செய்துகொண்டன. ஜப்பான், தாய்லாந்து முதலிய நாடுகள் இவ்வாறான வழிமுறையைப் பின்பற்றின. ஜப்பானின் பெருவளர்ச்சிக்கு ஒரு பிரதான காரணம், தனது கல்விமுறையினூடாக மேலைநாட்டு விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் உள்வாங்கிக் கொண்டமையாகும். இன்றும் கூட மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து முதலிய நாடுகள் மேலைநாடுகள் மற்றும் அவுஸ்திரேலியாவின் பல்கலைக்கழகங்களின் கிளைகளை அமைத்து அதனால் நன்மை பெற்று வருகின்றன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்வியை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள இந்த ஏற்பாடு உதவுகின்றது. இவ்வேற்பாடு *'Transnational Higher Education'* என அழைக்கப்படுகின்றது.

இது கல்வித்துறையில், ஒரு வகையில் "ஒருவழிப் போக்காக" இருந்து வந்தது. மேலைநாட்டுக் கல்வி ஏற்பாடுகள் வளர்முக நாடுகளுக்கு வந்து சேர்ந்ததை இது குறிக்கும். ஆனால் இன்று மேற்குறிப்பிட்ட கிழக்காசிய நாடுகளின் கல்விச் சாதனைகள் காரணமாக, மேலைநாடுகள் இந்நாடுகளின் கல்விச் சாதனைகள், அதற்கான காரணங்கள் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளன. உலகளாவிய கல்வி முறைகளில் இன்று ஒரு "இருவழிப் போக்குவரத்து" ஆரம்பமாகி உள்ளது. இதற்குக் காரணம், இக் கீழைத்தேய நாடுகளும் அரசாங்கங்களும் சமூகமும் - பிரதானமாகப் பெற்றோர்களும் நமது பிள்ளைகளின் கல்வியில் காட்டிவரும் ஆர்வமும் அக்கறையுமாகும்.

அண்மைக்கால ஆய்வுகளின்படி, மேலைநாடுகளை விடக் கிழக்காசிய நாடுகள் பாடசாலைக் கல்வித்துறையில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளன. அவுஸ்திரேலிய Grattan நிறுவனத்தின் ஆய்வுகளின்படி, கிழக்காசிய "வேங்கை" நாடுகளின் (தென்கொரியா, சிங்கப்பூர், தைவான், ஹொங்கொங்) நாடுகளின் கல்வித்துறை வெற்றிகளுக்குக் கடுமையான ஒழுக்கக் கட்டுப்பாடு, கொன்பியூசியசின் வழிகாட்டல் தத்துவங்கள், தாய்மாரின் ஈடுபாடு என்பன காரணங்கள் அல்ல. மாறாக இந்நாடுகள் அனைத்தும் கல்விக்கு ஒதுக்கும் அதிக அளவிலான நிதி வளங்களே அதற்குப் பிரதான காரணங்கள் ஆகும்.

பதினைந்து வயதில் ஷங்காய் (சீன) மாணவர்கள் சமவயதுள்ள மேலைநாட்டுப் பிள்ளைகளை விட இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் கல்விச் சித்தியில் முன்னேறியவர்களாகக் காணப்படுகின்றனர். தென்கொரியாவானது ஆரம்பக் கல்வியில் ஐக்கிய அமெரிக்காவை விட இரு மடங்கு அதிகமான நிதியைச் செலவு செய்கின்றது. தென்கொரியாவில் 80 சதவீதமானவர்கள் உயர் இடைநிலைக் கல்வியில் சித்தி பெறுகின்றனர். இது அமெரிக்கர்களின் சித்தியைவிட அதிகமானது. தென்கொரியா, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகியவற்றின் பிரதான பிரச்சினை அங்கு காணப்படும் இயற்கை வளங்களின் தட்டுப்பாடாகும். இதனை ஈடுசெய்ய அந்நாடுகள் மனிதவள விருத்தியில் தீவிரமாக ஈடுபட்டன. மக்களின் பொதுக்கல்வியில் ஏற்பட்ட பெருவளர்ச்சி காரணமாக, இந்நாடுகள் துரிதமாகப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றங் கண்டன. கிழக்காசிய நாடுகளின் வெற்றி வரலாற்றுக்கு அவை கல்வியில் செலுத்திய அக்கறையே பிரதான காரணம்.

இரண்டாம் உலக யுத்தம், கொரிய யுத்தம் என்பன காரணமாக இப்பிராந்தியத்தின் கைத்தொழில் உட்கட்டமைப்பு பெரும் அழிவுகளுக்குள்ளானது. இப்பிராந்தியப் பெற்றோரின் சிந்தனை பின்வருமாறு அமைந்தது. "நாம் சிறிதளவு உண்டு சிறிதளவு உடுத்தினாலும் போதுமானது; எமது பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெறுதல் வேண்டும்."

இத்தகைய உணர்வுடன் பெற்றோர்களும் சமூகமும் அரசாங்கமும் செயற்பட்டதால், கடந்த தசாப்தங்களில் பல வளர்ச்சிகள் இந்நாடுகளில் ஏற்பட்டன. மேலைநாடுகள் இவற்றை அவதானித்து, ஆச்சரியத்துக்குள்ளாயின. ஆனால் இக்கல்வி முயற்சிகள் பல பிரச்சினைகளையும் ஏற்படுத்தி விட்டன. பிரதானமாக மாணவர் மத்தியில் கடுமையான போட்டியும் "மிதமிஞ்சிய" அளவில் கற்றலில் ஈடுபாடும் ஏற்பட இம்முயற்சிகள் காரணமாயின என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். காலையில் ஐந்து மணிக்கே கல்விப் பணியைத் தொடங்கும் மாணவர் இரவு நீண்ட நேரம் வரை கற்க வேண்டியுள்ளது. பகல் நேரம் பாடசாலைக் கல்வி, அதன் பின்னர் தனியார் போதனை எனக் கல்வி நீடிக்கின்றது. கிழமையில் ஆறு நாட்களுக்கு மாணவர்கள் ஓய்வின்றிக் கற்பதால், பிள்ளைகளுக்கு சமூகத் தொடர்புகளுக்கு நேரங் கிடைப்பதில்லை.

தேசிய மட்டத்திலும் தனியாள் மட்டத்திலும் கல்வியில் தீவிர ஊக்கம் காட்டப்படுகின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் புகழ்பெற்ற உயர்குழாமினருக்கான பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சேர்ந்து பயில வேண்டுமென விரும்புகின்றனர். பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டின் ஒவ்வொரு சிறு அம்சத்தையும் நுட்பமாகக் கவனிக்கின்றனர். தாய்மார் எப்போதுமே உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பிள்ளைகளுக்கு நெருக்கமாக உள்ளனர். இது ஒருவகை 24 மணிநேரக் "கல்விக் கண்காணிப்பு".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் எதிர்கால தொழில்வாய்ப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு என்பன மட்டுமன்றி, அவர்கள் கல்வி கற்ற உயர்வகுப்பைச் *(elite class)* சென்றடைய வேண்டும்; இதனால் நல்ல இடத்தில் திருமணம், சமூக அந்தஸ்து எனப் பெற்றோரின் இலக்கு விரிவடைந்து செல்கின்றது. தென்கொரியப் பெற்றோர்கள் ஆரம்பத்திலேயே சிறந்த முன்பள்ளிகளைத் தேடுகின்றனர். எந்த முன்பள்ளியில் படித்தால் சிறந்த பல்கலைக்கழகங்களுக்குச் செல்லலாம் என ஆராய்கின்றனர். இச்சிந்தனைகளையெல்லாம் முழுமையான நடைமுறைப்படுத்துவதில் செல்வந்த வகுப்பினரே மும்முரமாக ஈடுபட முடிகின்றது. இதனால் கிழக்காசிய நாடுகளின் கல்வி "செல்வந்த வகுப்பினரை மேலும் செல்வந்தராக்க உதவுகின்றது; வறியவர்களை மேலும் வறியவர்களாக்குகின்றது" என்ற முறைப்பாடு உண்டு.

ஏனைய கிழக்காசிய நாடுகளில் போன்று கொரியாவில் ஒரு நாளில் நடைபெறும் அனுமதிப் பரீட்சையே மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கின்றது. அன்று முழு நாடுமே தேக்கமடைகின்றது. அன்று மேலதிக ரயில்கள் விடப்படுகின்றன; பரீட்சை நிலையங்களுக்கு மேல் விமானங்கள் பறப்பது தடை செய்யப்படுகின்றது; தொழிலாளர்கள் தாமதமாக வேலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். தாமதமாகும் மாணவர்கள் காவல் துறையினரின் உதவியுடன் துரிதமாகப் பரீட்சை நிலையம் செல்ல விசேட தொலைபேசி வசதி உண்டு. இந்நாடுகளில் தோல்விகளைப் பொறுத்துக்கொள்ள முடியாத கலாசாரம் வளர்த்து விடப்பட்டுள்ளது. இதனால் 17-18 வயதுப் பிள்ளைகளின் பாடு திண்டாட்டமாகி விட்டது. பிள்ளைகளுக்கு ஓய்வற்ற நிலையும் அவர்கள் போட்டிக் கலாசாரத்துக்கு இளமையிலேயே அறிமுகம் செய்யப்படுவதும் பல கல்விசார் பிரச்சினைகளையும் சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் காரணங்களாகி விடுகின்றன. பிள்ளைகள் சுயவிருப்பத்தின் பேரிலன்றி பெற்றோர்களின் விருப்பத்திற்கேற்ப செயற்பட நேரிடுவதால் இவ்வாறான உளநெருக்கடிக்கு ஆளாக நேரிடுகின்றது என்ற விமரிசனமும் உண்டு.

இவ்வாறான பிரச்சினைகள் இருந்த போதிலும் கிழக்காசிய நாடுகள் முன்னொரு போதும் இல்லாத அளவுக்குச் சர்வதேசப் பரீட்சைகளில் (கணிதம், விஞ்ஞானம்) ஏனைய முன்னேறிய நாடுகளை விட உயர்சித்தி அடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. மேலைநாடுகள் தமது பின்னடைவினையிட்டுக் கவலை கொண்டு, கல்வித்துறையில் மேம்பாடு காண புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

**சர்வதேச கணித, விஞ்ஞானப் பரீட்சைப் போக்குகள் (TIMSS)-2009**

| ***தரம் 4***<br>***நாடுகளின் நிலை(Rank)*** | | ***தரம் 8***<br>***நாடுகளின் நிலை(Rank)*** | | ***15 வயதுப் பிள்ளைகளின் நிலை***<br>***(கணிதம்)*** |
|---|---|---|---|---|
| 1. ஹொங்கொங் | (667) | 1. தைப்பே (சீனா) | (598) | 1. ஹொங்கொங் |
| 2. சிங்கப்பூர் | (599) | 2. தென்கொரியா | (597) | 2. பின்லாந்து |
| 3. தைப்பே | (576) | 3. சிங்கப்பூர் | (593) | 3. தென்கொரியா |
| 4. ஜப்பான் | (568) | 4. ஹொங்கொங் | (572) | 4. நெதர்லாந்து |
| 5. கஷாகஸ்தான் | (549) | 5. ஜப்பான் | (570) | 5. *Liechten Stein* |
| 6. ரஷ்ய கூட்டமைப்பு | (544) | 6. ஹங்கேரி | (517) | 6. ஜப்பான் |
| 7. இங்கிலாந்து | (541) | 7. இங்கிலாந்து | (513) | 7. கனடா |
| 8. லட்வியா | (537) | 8. ரஷ்யக் கூட்டமைப்பு | (512) | 8. பெல்ஜியம் |
| 9. நெதர்லாந்து | (535) | 9. ஐக்கிய அமெரிக்கா | (508) | 9. மக்காவு |
| 10. லிதுவேனியா | (530) | 10. லிதுவேனியா | (506) | 10. சுவிஸ்சர்லாந்து |
| **அடைப்புக்குறிக்குள் புள்ளிகள்** | | | | |


- **முதல் இரு அட்டவணைகளில் 4 வேங்கை நாடுகள் முன்னணியில் உள்ளன. எதிர்காலத்தில் இது தொடரும் மூன்றாவதில் இரு வேங்கை நாடுகள் உள்ளன.**
- **ஐக்கிய அமெரிக்கா மூன்று அட்டவணைகளிலும் பின்தங்கி உள்ளது.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சபா.ஜெயராசா

# கல்வித் தலைமைத்துவம்



கல்வித் தலைமைத்துவம் (Educational Leadership) என்ற கருத்தாக்கம் அண்மைக்காலமாக எழுச்சிகொள் ளத் தொடங்கியுள்ளது. கல்விச் செயற்பாடுகளை நிர்வகித்தல் தொடர்பான இரண்டு அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஒன்று பணியாட்சியின் வழிவந்த நிர்வாக அணுகுமுறை. மற்றையது தொழில் நிறுவனங்களை அடியொற்றி மேலெழுந்த முகாமைத்துவ அணுகுமுறை. அவற்றின் எழுபுலத்தில் தலைமைத்துவ அணுகுமுறை மூன்றாவது ஏற்பாடாக உருவாக்கம் பெற்றுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டிலிருந்து கல்வித் தலைமைத்துவம் என்ற செயற்பாடு முதன்மை பெறத் தொடங்கியுள்ளது. சிக்கனமான செயற்பாடுகளும் இலாப மீட்டலும் பாரம்பரியமான முகாமைத்துவத்தின் உள்ள டங்களாக இருக்கின்றன. ஆனால் கல்வியானது மனித மேம்பாட்டையும் சமூக உருவாக்கத்தையும் உடனடி இலக்காக மட்டுமன்றி நீண்டகால நோக்காகவும் கொண் டுள்ளது. ஒவ்வொரு கணமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றத்தோடு முன்னேற்றத்தை இட்டுச் செல்லும் தலைமைத்துவ நடவடிக்கைகளைக் கல்வி வேண்டி நிற்கின்றது.

தலைமைத்துவம் மாணவர் மீது எத்தகைய செல்வாக்குகளை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைத் தலைமைத்துவம் மாணவரது கற்றலை முன்னெடுக்கும் தலைமைத்துவமாகின்றது. கற்றலுக்கான தலைமைத்துவமே கல்வியின் உயிர்ப்பொரு ளாகின்றது. மாணவரும் அறிவுத் தொகுதியும் பன்முக இயல்புகளைக் கொண்டிருத்தலால், பன்மை இயல்புக ளுக்கான தலைமைத்துவமும் கல்வியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

பாடசாலைத் தலைமைத்துவத்தை மேற்கொள் பவர்கள் நான்கு செயற்பாதைகள் வழியாக மாணவரிடத் துச் செல்வாக்குகளை ஏற்படுத்த முடியும். அவை:

[1] முதலாவது செயற்பாதை வகுப்பறையின் பல்வேறு மாறிகளையும் தெரிந்து பயன்படுத்தும் நியாயித்தல் வழியான செயல்வழியாகின்றது.

[2] அடுத்து இடம்பெறுவது மனவெழுச்சிச் செயல் வழியாகின்றது. ஆசிரியரது மனவெழுச்சிகளும் மாணவரது மனவெழுச்சிகளும் கற்றல் - கற்பித்த லிலே செல்வாக்குகளை விளைவிப்பதால் அவற் றைக் கையாள்வதற்குரிய பொருத்தமான தலைமைத்துவ அணுகுமுறைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

[3] நிறுவன ஒழுங்கமைப்புச் செயற்பாதை அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலைக் கட்டமைப்பு, பாடசாலைப் பண்பாடு, கொள்கைகள் முதலியவற்றைத் தலைமைத்துவ நோக்கில் அணுகுதல் இப்பிரிவிலே குறிப்பிடப்படுகின்றது.

[4] குடும்பச் செயற்பாட்டை உள்ளடக்குதலும் மாணவரின் கற்றலை முன்னெடுப்பதற்கு அடிப்படையானது. அந்நிலையில் அந்தச் செயற்பாதையும் முக்கியத்துவம் பெறுகின்றது.

கல்விச் செயற்பாடுகள் மிகுந்த சிக்கலடைந்து வரும் நிலையில் மாற்றங்களினூடே முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைமைத்துவத்தை அதிபரும் ஆசிரியரும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பாடசாலை மேற்பார்வைக் குழு என்ற பழைய நடைமுறை நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. "தலைமைத்துவக்குழு" என்ற ஏற்பாட்டின் அடிப்படையிலே புதிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பாடசாலையின் தலைமைத்துவக் குழு பின்வருவனவற்றிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

[1] கல்வியுடன், இணைந்த அனைத்துப் பிரச்சினைகளையும் விளங்கிக்கொள்ளும் திறன்.

[2] வினைப்பாடுகளை முன்னெடுக்கும் அறிவு.

[3] நடைமுறைகளை மேலும் முன்னேற்றம் பெறச் செய்தல்.

[4] பட்டுத் தெறிக்கும் முறைமையை *(Reflexive Mode)* விருத்தி செய்தல்.

கற்றல் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கும் ஆசிரியர் பல்வேறு முகங்களைக் கொண்டிருப்பதுடன் தட்டையான *(Flat)* செயற்பாடுகளையும் கைவிடல் வேண்டும். கற்றலை உறுவளம் செய்தல், அறிவாற்றுனராக *(Mentor)* இயங்குதல், பயிற்றுனராகத் தொழிற்படல் போன்ற பல முகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டாகக் கற்கும் செயற்பாடுகளையும் மாணவரிடத்து முன்னேற்றம் பெறச் செய்தல் வேண்டும்.

கற்றல்சூழல், கற்றல்கோலங்கள், கற்றல் அணுகுமுறைகள், கற்றல் ஆதரவு போன்ற அனைத்துத் துறைகளிலும் தலைமைத்துவ நோக்கிலே கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

உலகிலே பாடசாலை அமைப்பு முறைகள் கட்டுப்பாட்டு நிலையில் மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

[1] மத்திய கட்டுப்பாட்டை மிகையாகக் கொண்ட நாடுகள் - சீனா, சைபிரஸ், கிறீஸ் மற்றும் இலங்கையையும் இப்பிரிவில் உள்ளடக்கலாம்.

[2] கூட்டாட்சி அரச முறைமையுடன் இணைந்த கல்வி நடவடிக்கைகளைக் கொண்ட நாடுகள் அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஐ.அமெரிக்கா, இந்தியா முதலியவை.

[3] பாடசாலை மட்டத்திலே பெரும்பாலான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய நாடுகள் - டென்மார்க், நியூசிலாந்து, இங்கிலாந்தும் வேல்சும்.

மேற்கூறிய மூன்று நிலைகளுக்கும் ஏற்றவாறு பாடசாலைத் தலைமைத்துவச் செயற்பாடுகளும் மாற்றமடைந்து செல்லும். மத்திய கட்டுப்பாட்டை மிகையாகக் கொண்ட நாடுகளில் பின்வரும் பிரதிகூலங்கள் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருத்தலை ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றனர். *(Tony Bush, ed. 2009:134)*

- பாடசாலைகளின் தனித்தனி ஆளுமைகளைக் கருத்திலே கொள்ளாது தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலை அதிக அளவிலே காணப்படல்.
- தொடர் தொழிலைத் தெரிவு செய்தல் தனிநபரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையிற் காணப்படும்.
- இனத்துவம், வர்க்கம் தொடர்பான அரசின் நிலைப்பாடு கல்வியிலே திணிப்புக்கு உள்ளாகும் நிலை அதிகரிக்கும்.
- தமக்கு விருப்பமில்லாத நிலையங்களில் அதிபரும் ஆசிரியர்களும் கடமையாற்ற வேண்டி நேரிடும்.
- இடமாற்றங்களால் ஆசிரியரின் தொழிற்பாடுகள் நிலைகுலைக்கப்படக் கூடிய நிலை ஏற்படும்.

கல்விச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மக்களின் மதிப்பீட்டுக்கும் திறனாய்வுக்கும் உட்படுத்தப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது. அந்நிலையிலே தவறான நியமனங்களும் பொருத்தமற்ற பதவி உயர்வுகளும் மேலும் கூடுதலான விமரிசனங்களை உருவாக்க வல்லவை.

கல்வித் தலைமைத்துவம் பன்முகத் தாக்கங்களுக்கு உட்படுத்தப்படக் கூடியது. தலைமை தாங்குவோர் பிறரிடத்து நிகழும் மாற்றங்களை மட்டும் கவனத்திலே கொள்ளாது, சூழலிலே நிகழும் மாற்றங்களையும் நம்முன்னே நிகழும் மாற்றங்களையும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும்.

தவறான நியமனங்களும் பதவி உயர்வுகளும் கல்வித் தலைமைத்துவச் செயற்பாடுகளை நேரடியாகப் பாதிப்படையச் செய்யும் வாண்மையில் நேரடியான பங்களிப்பைச் செலுத்த முடியாமை, வாண்மை நோக்குடன் பொருந்தி இணைய முடியாமை, கல்வி முன்னெடுப்பையும் தனித்தனி மாணவரின் ஆளுமையினையும் உரிய முறையிலே வளர்க்க முடியாமை, அதீத சுயநல நோக்கு முதலியவை இடம்பெறும் வாய்ப்புக்கள் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றற் செயற்பாடே கல்விநிலையங்களின் தலையாய நோக்கு. கற்றலும் தலைமைத்துவமும் நேரடியான இணைப்புக் கொண்டவை. "கற்றலுக்கான தலைமைத்துவம்" என்பது அண்மைக்காலமாக அதிக முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. வெற்றிகரமான கல்விக்குத் தரமான கற்பித்தலே அடிப்படையானதாகக் கொள்ளப்படுகின்றது. தரமான கற்பித்தல் பாடசாலைத் தலைவர்களின் கைகளிலே பெருமளவிலே தங்கியுள்ளது. தரமான கற்பித்தல் மாணவரின் கற்கும் திறனில் மட்டுமன்றி ஆசிரியரின் கற்கும் திறனிலும் தங்கியுள்ளது.

கல்வித் தலைமைத்துவத்தோடு இணைந்ததாக கற்றல் சமூகம் அமைகின்றது. மோல்டா நாட்டில் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கற்றல் சமூகத்தின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. *(Bezzina, 2008)* பாடசாலையில் நிகழும் வெற்றிகரமான செயற்பாடுகள் கற்றல் சமூகத்தை உருவாக்குகின்றது என்பது அந்த ஆய்வுகளிலிருந்து வெளிப்படுகின்றது.

கற்றல் சமூகம் பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியிருக்கும்.

- ஆசிரியரின் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்படுதல்.
- ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே கற்றலை மேலோங்கச் செய்யும் இடைவினைகள் இடம்பெற்ற வண்ணமிருத்தல்.
- அறிவை முன்னெடுக்கும் தற்படிமவாக்கம் ஆசிரியர்களிடத்தும் மாணவர்களிடத்தும் காணப்படுதல்.
- கற்றல் - கற்பித்தலிலே ஊக்கற் செயற்பாடு தொடர்ந்த வண்ணமிருத்தல்.
- மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையேயுள்ள நம்பிக்கை வருவடைந்து செல்லல்.
- பாடசாலைத் தலைவர்களின் "மறைமுகமான செல்வாக்கு" என்பது அதிக முக்கியத்துவம் பெறுவதாக அமைதல்.
- தொடர்ச்சியான வலுவூட்டல் அனைவருக்கும் கிடைக்கப்பெற்ற வண்ணமிருத்தல்.


கற்றல் தலைமைத்துவத்துடன் இணைந்த பிறிதோர் அமைப்பாகக் "கற்றற் பண்பாடு" அமைகின்றது. பண்பாடு என்பது "உள்ளத்தின் மென்பொருள்" *(Soft ware of mind)* என்று கூறப்படும். கற்றற் பண்பாட்டிலே பின்வரும் பரிமாணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

[1] கற்றலுக்குச் சாட்சியாக இருத்தல்.

[2] கல்விக்கு ஏற்புடைய நிலையில் இருத்தல்.

[3] கற்றலில் மீண்டெழும் பண்பு நிலவுதல்.

[4] கற்றலை எட்டிப் பிடித்தல்.



[5] கல்வி நிறுவனங்களில் நம்பிக்கை கொள்ளல்.

[6] அறிவுடையவர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளல்.

[7] உசாவல் விருப்புடனிருத்தல்.

[8] அறிவைக் களஞ்சியப்படுத்துதலும் தொடர்ந்து முன்னெடுத்தலும்.

[9] கற்றலை வளம்படுத்தும் வளங்களை உருவாக்கிக் கொண்டிருத்தல்.

பாடசாலைத் தலைமைத்துவம் "பகிர்வுநிலை"த் தலைமைத்துவம் எனப்படும். அதிகாரங்களும், செயற்பாடுகளும் பொறுப்புக்களும் உரியமுறையிலே பகிர்வு செய்யப்பட்டிருக்கும் பொழுது தலைமைத்துவம் சிறப்படையும். பகிர்வு நிலையையும் பன்மைநிலையும் உள்ளடக்கியதாகக் கல்வித் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

மரபு வழியான கல்வி நிர்வாகத்தில் எல்லைப் படுத்தப்பட்டோராகிய பிரதிகூலமெய்திய மாணவரும் பெற்றோரும் கல்வித்தலைமைத்துவச் செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. அந்தச் செயற்பாடும் கல்வித் தலைமைத்துவத்தின் ஆற்றலையும் பலத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது.

கல்வித் தலைமைத்துவம் என்பது ஒரு "நவீன மென்பொருளாக" ஆசிரியர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. நீர்த்துப்போன பழைய நிர்வாகச் சிந்தனைகளில் இருந்து விடுபடுவதற்குரிய மாற்றுச் சிந்தனைகள் மேலெழும் காலகட்டத்தில் "கல்வித் தலைமைத்துவம்" என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் அறிவும்
# வகுப்பறைச் செயற்பாடுகளும்

மா.கருணாநிதி











ஆசிரியர் தொழிலை உயர்தொழிலாக மாற்றும் நோக்கில் ஆசிரியரின் தராதர மேம்பாட்டுக்கான கல்வி மற்றும் பயிற்சி சார்ந்த நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்கள் ஒழுங்குசெய்யும் கற்கைநெறிகளில் பல்வேறு நிலைகளிலும் மாற்றங்கள் அவசியம் என்பது விதந்துரைக்கப் பட்டுள்ளது. அசிரியர் கல்விக்கான புதிய நிறுவனங்களை நிறுவதற்கும் பல நிறுவனங்களின் உதவியையும் கல்வியமைச்சு நாடி நிற்கிறது.

மறுபுறத்தில் ஆசிரியர் தொழிலுக்கான அந்தஸ்தும் அங்கீகாரமும் வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையும் உள்ளது. ஆசிரியர் தொழில் பற்றிய பாதகமான விமரிசனங்கள் அதிகரித்துள்ளன. பாடசாலைகளில் பெறுமானங்கள் சீர்குலைந்து செல்கின்றன. மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வாய்ப்பாக அமையவில்லை. பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியிலும் மாணவரின் நடத்தைக் கோலங்கள் மாறுபட்டுச் செல்கின்றன. வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தராதரம் கேள்விக் குள்ளாகிறது. வகுப்பறையில் கட்டுப்பாட்டைப் பேணுதல் ஆசிரியரின் முக்கியபொறுப்பு என வினா எழுப்பும்போது அதனை அதிபரிடம் முறையிடுங்கள் என்ற பதிலைக் கூறுவதற்கும் ஆசிரியர்கள் தயக்கங் காட்டவில்லை. இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான பல கோணங்களில் விமரிசனங்கள் எழுந்து வருவதனைக் காண்கிறோம்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் மாணவர்கள் பல புதிய விடயங்களைக் கற்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக உள்ளன. அவை ஆசிரியர்களின் தொழில்சார் பொறுப்புகளிலும் கடமைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவைகளை உருவாக்கியுள்ளன. ஏற்பட்டுவரும் மாற்றங்களின் உண்மைநிலை அறியப்படாத நிலையிலேயே வகுப்பறைச் செயற்பாடுகள் நிகழ்கின்றன. மாணவர்கள் மேலதிக கலைத்திட்டச் செயற்பாடுகளில் பங்கேற்க ஊக்கம் வழங்கப்படுவதில்லை. அவர்களுடைய உடல், மற்றும் உள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியம் பாதிப்புக்குள்ளாகிறது. பெற்றோரின் கவனயீனங்கள் மலிகின்றன. இலத்திரன் சாதனங்களைத் தவறான நோக்கங்களுடன் பயன்படுத்துவதால் சமூகச் சீர்கேடுகள் பெருகுகின்றன. பாடசாலையின் மீது சமுதாயம் கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பாதகமான அபிப்பிராயங்கள் உண்டாகின்றன. பாடசாலைகளின் இத்தகைய செல்நெறிகள் ஆசிரியர் தொழில் உயர்தொழில் என்னும் கருத்துக்கு அறைகூவல்களாகின்றன. இவற்றினின்றும் மீண்டெழுதல் எம்முன்னுள்ள பாரிய பொறுப்பாகும்.

இக்கட்டுரையானது பாடசாலைகளின் இடம்பெறுகின்ற அன்றாட நிகழ்வுகளை ஆசிரியர் தொழில் சார்ந்த கொள்கைப் பின்னணியில் பார்ப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆசிரியர் தொழில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட உயர் தொழிலாக விளங்குவதற்கு உயர்தொழில் சார்ந்த பல துறைகளில் அறிவு மேம்பாடு அவசியம் என்பதை உலக நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் உணர்த்தி நிற்கின்றன. ஒருவர் ஈடுபடுகின்ற தொழில் தொடர்பான அறிவு அவசியமானது என்பது ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இன்றைய சூழமைவில் ஆசிரியரின் அறிவு தொடர்பாகப் பல்வேறு வினாக்கள் எழுப்பப்படுகின்றன. ஆசிரியர் தொழிலோடு இணைந்த சிந்தனை மற்றும் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான அறிவு, அறிவைப் பெறும் வழிமுறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட அறிவைப் பேணும் வழிமுறைகள் பற்றிய அறிவு, வகுப்பறைச் செயற்பாடுகளில் அறிவைப் பயன்படுத்தும் விதம் போன்றவை ஆசிரியரின் உயர்தொழில் மேம்பாட்டுக்கான அடிப்படைகள் என ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

உயர்தொழில் தொடர்பாக ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய அறிவு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன:

[1] உள்ளடக்கம் சார்ந்த அறிவு

[2] மாணவர் மற்றும் மாணவரின் கற்றல் தொடர்பான அறிவு

[3] பொதுக் கற்பித்தல்முறை சார்ந்த அறிவு

[4] கலைத்திட்டம் தொடர்பான அறிவு

[5] சூழமைவு பற்றிய அறிவு

[6] தன்னைப் பற்றிய அறிவு

உள்ளடக்கம் சார்ந்த அறிவானது கற்பிக்கும் விடயம் பற்றிய அறிவை மட்டுமன்றி கற்பித்தலியல் பற்றிய அறிவையும் மாணவர் மற்றும் கற்றல் தொடர்பான அறிவானது கற்றல் கொள்கைகள், மாணவரின் உடல், உளம் சமூகம் மற்றும் அறிகைசார் விருத்தி என்பவற்றையும் இவற்றோடு ஊக்கல் கொள்கை அவற்றின் நடைமுறைப் பிரயோகம், மாணவரின் இனத்துவம், மொழி, பொருளாதாரப் பின்னணி, பால்வகை ஆகியவற்றிலுள்ள பல்வகைமை போன்றவற்றையும் உள்ளடக்கும். பொதுக் கற்பித்தலியல் தொடர்பான அறிவானது வகுப்பறை ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம், கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவையும் கலைத்திட்டம் தொடர்பான அறிவானது கலைத்திட்டச் செயல்முறைகள், கலைத்திட்ட அபிவிருத்தி மற்றும் பாடசாலைகளில் கலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துதல் என்பதனையும் கருதும்.

மாணவர் குடும்பச்சூழல், பாடசாலை அமைந்துள்ள சமூகம் ஆகியவற்றோடு அந்தந்த நாட்டுக்கல்வி வரலாறு, கோட்பாடு, கலாசாரா அடிப்படைகள் பற்றிய அறிவு போன்றவற்றுடன் சூழமைவு தொடர்பான அறிவும் உள்ளடக்கும். இறுதியாக, ஆசிரியரின் தன்னைப் பற்றிய அறிவானது தனியாள் பெறுமானங்கள், பலமும் பலவீனங்களும், ஆசிரியரின் வாழ்க்கைக் கோட்பாடுகள், மாணவர் குறித்து அவர் கொண்டிருக்கும் இலக்குகள், கற்பித்தலின் நோக்கங்கள் முதலியவற்றுடன் தொடர்புபடுகின்றது. இவ்விடயங்கள் தொடர்பாக விரிவான முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது வகுப்பறைச் செயற்பாடுகளில் தராதர மேம்பாடு குறித்துக் கூடுதலான கவனஞ் செலுத்துதல் அத்தியாவசியமாகிறது.

**உள்ளடக்கம் சார்ந்த அறிவு**

உள்ளடக்கம் தொடர்பாக ஆசிரியர்கள் பெற்றிருக்கும் அறிவானது அவர்கள் என்ன விடயங்களை எவ்வாறு கற்பிக்கிறார்கள் என்ற விடயங்களில் செல்வாக்குச் செலுத்தும். ஒரு பாடத்திலே ஆசிரியர் பெற்றிருக்கும் அறிவானது திட்டமிடப்பட்டுள்ள கலைத்திட்டத்திற்கு அமைவாக அறிவையும் திறனையும் மனப்பாங்கையும் பரிமாறுந் தன்மையை வெளிப்படுத்தும். குறித்த தரத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்கள் கையாளும் உபாயங்களில் மாற்றங்கள் உருவாக்கும். கலைத்திட்ட உள்ளடக்கம் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொழுது அந்த அறிவு பிரதிபலித்தல் வேண்டும்.

**பொதுக் கற்பித்தல்முறை சார்ந்த அறிவு**

கற்பித்தலியல் சார்ந்த அறிவின் உள்ளடக்கமானது, வகுப்பறை ஒழுங்கமைப்பு, வகுப்பறை முகாமைத்துவம், பாட அமைப்புப் பற்றிய பொதுவான அறிவு, கற்பித்தல் பொதுமுறைகள் முதலியவற்றை உள்ளடக்கும். கற்பித்தல் நிகழும்போது வகுப்பறையில் ஒழுங்கையும் கட்டுப்பாடுகளையும் பேணுவதில் ஆசிரியர்களின் கவனம் அமையும் விதத்தையும் இவை கருதும் வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு ஆகிய விடயங்களில் ஓர் ஆசிரியர் தமது வகிபாகத்தினை நன்கு அறிந்திருப்பதும் செல்வாக்குச் செலுத்தும். இவ்விடயத்தில் ஆய்வுகளை மேற்கொண்டோர் வகுப்பறை முகாமைத்துவமானது மாறிவரும் வகிபங்குகளைக் கவனத்தில் கொண்டு மீளஒழுங்கு செய்யப்படுதல் வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி நெறிகளில் பல்வேறு கற்பித்தல் முறைகள் அறிமுகஞ் செய்யப்பட்டாலும் வகுப்பறைகளில் அவை ஒருசில முறைகளோடு மட்டுப்படுத்தப்படுகின்றன. கற்பித்தல் முறைக்கும் மாணவர் வினையாற்றலுக்குமிடையில் இணைவுகள் உள்ளன என்பது பொதுவான முடிபுகளாகும். கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடும் பொழுது இத்தகைய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

கற்பித்தலியல் பற்றிய அறிவில் கற்றல் - கற்பித்தலியல் கோட்பாடுகளைப் பொதுமையாக்கம் செய்யக்கூடிய அறிவும் ஆசிரியருக்கு இருக்க வேண்டும் என புறூணர் (1986) குறிப்பிட்டுள்ளார். இவர் அறிவின் பயன்பாட்டினை இரண்டு வகையாகப் புகுத்துக்காட்டியுள்ளார்.

(1) பயன்பாட்டு அறிவு *(pragmatic knowledge)*

(2) விவரண அறிவு *(narrative knowledge)* வெவ்வேறு சூழமைவிலும் பின்புலங்களிலும் விஞ்ஞான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி அறிவினைப் பயன் படுத்துதல் பயன்பாட்டு அறிவெனப் பொருள்படுகிறது. இத்தகைய முறையில் கற்பித்தல் இடம் பெறும்போது உயர் ஒழுங்கிலான சிந்தனை தூண்டப்படுகிறது. இத்தருணத்தில் ஆசிரியர்கள் தமது கற்பித்தலில் புதிய விதிகளையும் நடைமுறைகளையும் மேற்கொள்வதற்கு ஆசிரியர்கள் ஆராய்ச்சியின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் அறிவு பயனுள்ளதாக இருக்கும்.



கற்பித்தல் முறையில் பரிசோதனை முறையிலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வோர் குறிப்பிட்ட கருத்து என்னவெனில் அனுபவமுள்ள ஆசிரியர்கள் இவ்வாறான விடயங்களில் ஈடுபடுதல் வேண்டும் என்பதாகும். ஆயினும் ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில் கற்பித்தலை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பெருமளவில் விரிவடையவில்லை. பயன்பாட்டு அறிவானது வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பாக காரணங்காணும் செயலுக்கும் அதன்வழியே முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் வழிகாட்டுகிறது.

விவரண அறிவானது, தனிப்பட்டதும் மற்றும் கதைகளின் அடிப்படையிலும் இடம்பெறுவதாகும். இந்த வகையிலான கற்பித்தல் பற்றிய அறிவு, சம்பிரதாயங்கள், வழமையான பணிகள் மற்றும் உள்ளூர்ச் சூழமைவு ஆகியவற்றினூடாக ஆசிரியர்கள் தாமாக உருவாக்கும் அறிவாகும்.

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கற்பித்தலியல் அறிவு சார்ந்த விடயங்களின் நடைமுறைப் பிரயோகத்தில் பல இடைவெளிகள் உள்ளன.

[1] அனுபவம் மிகுந்த ஆசிரியர்களின் வழிகாட்டல் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. அனுபவம் மிக்கவர்கள் முன்வருவதுமில்லை.

[2] வகுப்பறையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்த முடியாதநிலை. மாணவர்களைக் கட்டுப்படுத்துவது கடினமெனக் கூறுவதில் ஆர்வமாக உள்ள ஆசிரியர்கள்.

[3] மாறிவரும் வகிபாகங்களை அறிந்துகொண்டு அதனை மாற்றவிரும்பாத ஆசிரியர்கள்.

[4] கலைத்திட்டத்தில் புதிதாக அறிமுகம் செய்யப்படும் கற்பித்தல் முறைகளை மாணவரின் இயல்புகளை இனங்கண்டு பயன்படுத்த முடியாத ஆசிரியர்கள்.

கற்பித்தல் பொதுவிடயங்கள் தொடர்பான மேற்கூறிய அறிவில் மாற்றங்கள் ஏற்படாத வரையில் எதிர்பார்க்கப்படும் தராதரங்களில் மாற்றங்களை உருவாக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தன்னைப் பற்றிய அறிவு

ஆசிரியர்களின் தொழில்சார் நடைமுறைகளுக்கு அவர்கள் தம்மைப்பற்றிக் கொண்டுள்ள அறிவுக்கும் முக்கிய இடமுண்டு. ஆசிரியர்கள் பெறுமானங்களை அறிந்துகொள்ளுதல் தமக்கென்ற கோட்பாடுகள், இலக்குகளுடையவராதல், தனிப்பட்ட குணவியல்புகள் தமது கற்பித்தலின் குறைநிறைகளை அறிந்திருத்தல் முக்கியமானவை. இவை யாவும் வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதிபலித்தல் வேண்டும். ஆசிரியர்கள் தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் அறிவிலும் ஆளுக்காள் வேறுபாடுகள் உள்ளன. ஆசிரியர்களின் கோட்பாடு சார்ந்த அறிவு மற்றும் கருத்துநிலை என்பன தனியாள் சார்ந்தவை. இவை தம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் பெறுமானங் களின் வாயிலாகவும் இலக்குகள் வாயிலாகவும் வடிகட்டியெடுக்கப்படுகின்றன. தொழில்சார்ந்த தொலை நோக்கும் தம்மிடம் கற்கும் மாணவர்கள் பற்றிய எதிர்பார்ப்புகளும் இத்தகைய அடிப்படைகளிலிருந்தே கட்டியெழுப்பப்படுகின்றன.

### புதிய அறிவை உருவாக்குவதில் அறிவை ஒன்றிணைத்தல்

மேலே எடுத்துக்கூறப்பட்டவாறு ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய அறிவு பற்றி வெவ்வேறாக விபரிக்கப் பட்டிருந்தாலும் உயர்தொழில் தொடர்பான நோக்கில் அவற்றை ஒன்றிணைந்த வகையிலே நோக்குதல் வேண்டும். வகுப்பறைச் செயற்பாடுகளில் தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்களை ஒன்றிணைக்கும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு இருத்தல் வேண்டும். இவ்விடயத்தில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுமானால் ஆசிரியரின் வினையாற்றல் பாதிப்புகுள்ளாகும். ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிநெறிகளில் இவை கவனத்திற்குட் பட வேண்டிய விடயமாகும்.

ஆசிரியர் பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவு நிலையானதல்ல. கற்பித்தலின்போதும் அது சார்ந்த பிரதிபலிப்புகளின்போதும் ஆசிரியர்கள் கற்பிக்கின்ற விடயங்கள், கற்பவர்கள், மற்றும் தம்மைப் பற்றியும் புதிய விளக்கங்களை உருவாக்கிக்கொள்ளுதல் வேண்டும். பல்வேறு மூலாதாரங்களிலிருந்து அறிவைத் தேடும் ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்தி புதிய அறிவை உருவாக்குதல் அத்தியாவசியமானது.

### எமது வகுப்பறை நிலைமை

மேற்கூறிய விடயங்களுடன் எமது வகுப்பறை நிலைமைகளை ஒப்பிடுகையில், அவதானிக்கக்கூடிய விடயங்கள் பல விதத்தில் வேறுபட்டுள்ளன. உதாரண மாக கலைத்திட்ட உள்ளடக்கம் பற்றிய தீர்மானங்களில் ஆசிரியர்களின் பங்களிப்புக்கு இடமளித்தல் குறைவு. வகுப்பறைச் செயற்பாடுகளில் இயல்புக்கு மாறான தன்மைகள் மேலோங்கி வருகின்றன. இத்தகைய மாறுபட்ட கோலங்களுக்கு பாடநூல்களும் ஆசிரியர் அறிவுரைப்புக் கைந்நூல்களும் காரணமாக உள்ளன. இன, மொழி மற்றும் மத வேறுபாடுகளின்றி கற்கும் விடயங்களில் சமத்துவமும் நியாயத்தன்மையும் இருத்தல் வேண்டும் என்னும் நோக்கில் பாடநூல்களும் வழிகாட்டி களும் வழங்கப்படுதல் நன்மைதரும் விடயமாக இருந்தா லும் மாணவர் மற்றும் ஆசிரியர்களின் சிந்தனையில் பன்முகத் தன்மையை மழுங்கடிக்கச் செய்கின்றன என்ற கருத்தும் பரவலாக உள்ளது.

கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங் கள் உள்ளடக்கம் சார்ந்த அறிவுக் குறைவினால் அவை கற்பிக்கப்படாமல் விடப்படுவதும் உண்டு. கணிதம், விஞ்ஞானம் மற்றும் சமூகவிஞ்ஞானப் பாடங்கள் பலவற்றைக் கற்பித்தலில் இத்தகைய பிரச்சினைகள் உள்ளன. உதாரணமாக பெரும்பாலான பாடசாலை களில் கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் போதியளவில் இல்லை. கணிதத்தில் போதிய அறிவற்ற ஆசிரியர்கள் கணிதம் கற்பிக்குமாறு பணிக்கப்படுகிறார்கள். இவ்வா றான ஆசிரியர்கள் பல்வேறு விடயங்களில் எண்ணக்கரு சார்ந்த விளக்கமின்றிக் கற்பிப்பதால் மாணவர்கள் பாதிக் கப்படுகின்றனர். மேலும் இவ்வாறான பாடங்களைக் கற்பிக்கும்போது மாணவர்களின் பிரதிபலிப்பு, இடை வினைத்தாக்கம், வாழ்க்கை அனுபவங்களுடன் இணைக்கப்படுதல் என்பனவும் மிகமிகக் குறைவு.

சமூக விஞ்ஞானப் பாடங்களைப் பொறுத்தவரை யில் பாடநூல்களைத் தவிர மேலதிக விடயங்களை வாசிப்பதில் ஆர்வம் தூண்டப்படுவதில்லை. பாடநூல் களை வேதமந்திரங்களாகக் கருதுவதால் மாணவர்கள் அதற்கு அப்பால் சென்று புதிய அர்த்தங்களை உருவாக்க வழங்கப்படும் வாய்ப்புகள் மிகமிகக்குறைவு. தற்பொழுது மிகவும் உற்சாகமாக நடைமுறைப்படுத்தப்படும் 5E உபாயத்திற்கான செயல்முறைகள் இதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றன. இதனை அறிமுகஞ்செய்த நோக்கமும் நடைமுறைப்படுத்தும் விதமும் பெரிதும் முரண்பட்டுள்ளன. 5E கற்பித்தல் உபாயத்தைப் பயன்படுத்தும் பொழுது கற்றலும் கற்பித்தலும் கற்கும் விடயங்களில் மாணவர்கள் உண்மையான அர்த்தத்தை விளங்கிக்கொள்வதற்கும் உருவாக்குவதற்கும் பொருத்த மான விளக்கங்களையும் செயற்பாடுகளையும் அறிமுகஞ் செய்தல் வேண்டும் என்று ஆசிரியர்கள் எதிர்பார்க்கப்படு கின்றனர். நடைமுறைப்படுத்தும் விடயங்கள் எந்த மட்டத்தில் காணப்படுகின்றன என்பதும் கேள்விக்குரியதாகின்றது. இவ்விடயத்திலுள்ள இடர்ப்பாடுகளை ஆசிரியர்கள் சிலர் மனந்திறந்து கூறுகின்றமையும் கவனத்திற்குரியது.

இந்த உபாயத்தில் இடம்பெறும் 5 கட்டங்களுக்கும் உரிய செயல்நிலைகள் மிகவும் பரந்தவை, ஆழமானவை மற்றும் நுணுக்கமானவை. இவற்றை அறிந்திருந்தும் சகல செயற்பாடுகளும் பெரும்பாலும் பாடநூல்களுடனேயே மட்டுப்படுத்தப்படுகின்றமை எதிர்பார்த்த விளைவுகளை அடைவதற்கு பெருந்தடையாக அமைந்துவிடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவை கற்பித்தலிலும் கற்றலிலும் இரண்டுங்கெட்ட நிலைமையை உருவாக்கி வருகின்றன.

இங்கு, கற்பித்தல் செயற்பாடுகள் மாணவரின் சிந்தனையை விரிவுபடுத்த உதவுகின்றனவா? என்ற இன்னொரு முக்கிய வினாவும் எழுகின்றது. உதாரணமாக வகுப்பறையில் வினாக்கேட்டலை எடுத்துக் கொள்ளலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வகுப்பறைகளில் கேட்கப்படும் வினாக்கள் அறிமுக வினாக்களாக அல்லது அறிகை ஆட்சியில் கீழ்நிலையிலுள்ள வினாக்களாக அமைந்து விடுகின்றன. மாணவர்களும் இத்தகைய வினாக்களுக்குத் தமது ஞாபகத்திலிருந்து விடைகளைக் கூறிமுடித்து விடுகின்றனர். கற்பித்தலியல் தொடர்பாக தாம் கற்றுக்கொண்ட விடயங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதே இதன் உட்பொருளாகும்.

ஆசிரியர்களின் கற்பித்தலியல் உள்ளடக்கம் தொடர்பாகப் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் பாடவிடயங்களைக் கற்பித்தலின் நோக்கம் பற்றிய கருத்துகளை அறிய முற்பட்டுள்ளன. பாடவிடயத்திலும் கற்பித்தலியலிலும் உயர் அறிவுடைய ஆசிரியர்களே மாணவர்களின் உயர்அறிகை சார்ந்த கற்றலுக்கும் வழிகோலுவார்கள். ஆசிரியருக்குள்ள அறிவானது வகுப்பறைப் போதனைக்காகப் பாடங்களைத் திட்டமிடுவதில் செல்வாக்குச் செலுத்தும். மாணவர் கற்றலில் கற்பித்தலியலில் மாணவர்களுடைய உணர்வுகள், மனவெழுச்சிகள் மற்றும் அவர்கள் வெளிப்படுத்தும் ஏனைய நடத்தைகள் மீது கவனஞ்செலுத்தும் ஆசிரியர்களே வெற்றிகரமான வகுப்பறை முகாமையாளர்களாக விளங்கமுடியும். கற்பித்தலில் அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள் வருடத்தின் தொடக்கத்திலேயே வகுப்பறைச் செயற்பாடுகளுக்கான வழமைகளை உருவாக்கிவிடுவர். இவை வகுப்பறையில் ஒழுக்கக்கட்டுப்பாடுகளை மட்டுமன்றிக் கற்பித்தலையும் இலகுபடுத்திவிடும்.

இங்கு கவனத்தில்கொள்ள வேண்டிய இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில் அனுபவம்மிக்க ஆசிரியர்கள் வகுப்பறை தொடர்பான தகவல்களை புதிய அசிரியர்களிலும் பார்க்கத் துரிதமாகவும் இலகுவாகவும் நிரற்படுத்திக் கொள்கின்றனர். ஆசிரியர்களிடமிருந்து புதிய ஆசிரியர்கள் கற்க வேண்டிய விடயங்கள் பலவுள்ளன.

உயர்தொழிற்தகைமைகளை பெற்றுக்கொள்வதற்கு உற்சாகம் காட்டும் ஆசிரியர்கள் தாம்பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவங்களையும் ஆற்றல்களையும் வகுப்பறையில் பிரயோகிப்பதற்குக் காட்டும் ஊக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது. உயர்தொழில் பயிற்சிகளை வழங்கும் காலகட்டத்தில் அதனைத் தொடர்வோர் மத்தியில் சுயசெயற்பாடுகள் குறைந்துள்ளன. பெருமளவில் தங்கியிருக்கும் நிலை காணப்படுகிறது. மாணவர் கற்றலை ஊக்குவிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படுதல் அவசியம் என்பது வலியுறுத்தப்படும் வேளையில் ஆசிரியர் கல்வியில் பாரிய மாற்றங்கள் ஏற்படுதல் முக்கியம் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. இவ்விடயத்தில் உயர்தொழில்சார் கற்கைநெறிகளை வழங்கும் நிறுவனங்கள் சில மாற்றங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ந.அனந்தராஜ்

# பாடசாலைகளை வினைத்திறனுடையதாக்கும் நுட்பங்கள்

அண்மைக்காலமாக எமது தமிழ்மொழி மூலப் பாடசாலைகளின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் பல்வேறு விமரிசனங்களுக்கு ஆளாகிவரும் நிலையில் இத்தகைய விமரிசனங்களில் இருந்து எவ்வாறு பாடசாலைகள் மீண்டெழ முடியும்?

- யாழ்.மாவட்டம் பரீட்சைப் பெறுபேற்றில் பதினாறாவது மாவட்டமாக வந்துவிட்டது.
- வடமாகாணம் ஒன்பதாவதாகப் பின்தள்ளப்பட்டுவிட்டது.
- தமிழ்மொழிப் பாடத்திலான பெறுபேறுகள் மோசமாகப் போய்விட்டன.
- கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்கு மாணவர்கள் சேரும் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து கொண்டு போகின்றது.
- பிள்ளைகளின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்களுக்குப் பெற்றோர்கள் வருவது குறைவாக இருக்கின்றது.
- எல்லாப் பாடங்களிலும் சித்தியடையத் தவறுபவர்களின் எண்ணிக்கை மற்றைய மாவட்டங்களை விட அதிகம் என்பன போன்ற குற்றச் சாட்டுக்கள் அண்மைக்காலமாக கல்வியாளர்களினாலும், ஊடகங்களினாலும் சுட்டிக் காட்டப்பட்டு வருவதை எவ்வளவு காலத்திற்கு எங்களுடைய கல்விச் சமூகம் பார்த்துக் கொண்டிருக்கப் போகின்றது? இத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு யார் காரணம்? முற்று முழுதாகப் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மட்டும் தானா? அல்லது இதற்கு கல்விப் பணிப்பாளர்களோ அல்லது பிரதி மற்றும் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களோ அல்லது நூற்றுக்கணக்காக வலயங்களில் காணப்படுகின்ற சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களே காரணம் இல்லையென்று கூறமுடியுமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் நடந்த சம்பவமொன்றை இணைத்துப் பார்ப் போம். பல மாதங்களுக்கு மேலாக ஒரு விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு மாணவர்களை ஆசிரியர் அழைத்துச் செல்லாததற்கு அவர், "ஆய்வு கூடத்திற்குள் நிறைய எலிகள் இருப்பதால், உபகரணங்களை வைத்து எடுக்கமுடியவில்லை." எனக் குறிப்பிட்டார்.

அவ்வாறான ஒரு 1 AB பாடசாலையில் எத்தனை வீத மாணவர்களை அந்த ஆசிரியரால் விஞ்ஞானத்தில் சித்தியடைய வைத்திருக்க முடியும்? விஞ்ஞான பாடத்தை அறிமுறையாகக் கற்பிக்கும் ஒரு பாடசாலை யில் க.பொ.த.உயர்தர விஞ்ஞான வகுப்பில் எத்தனை மாணவர்கள் ஆர்வத்துடன் சேர்ந்து கற்பதற்குத் தயாராக முன்வருவர்? இது அந்தப் பாடசாலையில் உள்ள பலமா அல்லது பலவீனமா?

அதைவிட வேடிக்கை, அந்தப் பாடசாலைக்கு விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், விஞ்ஞான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் குழுமேற் பார்வை என்று எத்தனை தடவைகள் அந்தப் பாட சாலைக்கு வருகை தந்திருப்பார்கள்? இது அவர்களு டைய பலமா அல்லது பலவீனமா? ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சிக்காகவும் பாடசாலையிலான உள்ளகப் பயிற்சிக்காகவும் எவ்வளவு பணத்தைச் செலவு செய்து ஆசிரியர் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன?

கல்வி அதிகாரிகள் தான் வெளியிடங்களில் இருந்து என்றோ ஒரு நாளைக்கு வந்து விட்டுப் போவார்கள். தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவிட்டுப் பிள்ளையின் வளமான எதிர்காலத்தை நோக்கி வானத் தைப் பார்த்தபடி தவம் இருக்கின்ற பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் சங்கம் என்று கூறிக்கூறியே பெருமைப்பட்டுக் கொண்டிருக்கின்ற பழைய மாணவர் கள் இவற்றைப் பார்த்திருப்பார்களா? இது அவர்களது பலமா அல்லது பலவீனமா? அல்லது இவர்களுக்குச் சரியானவற்றைச் சரியான நேரத்தில் செய்யமுடியாத அளவுக்கு ஏதாவது அச்சுறுத்தல்கள் உள்ளனவா? இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சரியானவற் றைச் சரியான நேரத்தில் செய்து முடிப்பதற்குத் தடையாக உள்ள காரணிகளும், வாய்ப்பாக உள்ள காரணிகளும் ஒவ்வொருவராலும் இனங்காணப்படுமானால் ஒரு பாடசாலையையோ அல்லது ஒரு வீட்டையோ அல்லது எந்த ஒரு நிறுவனத்தையோ கூட மிகக் குறுகிய காலத்தினுள் உயர் நிலைக்குக் கொண்டு வரலாம்.

வினைத்திறன் பற்றியும், அதனால் ஏற்படும் விளைதிறன் வீதம் பற்றியும் சிந்திப்பதற்கு முன்னர், ஒரு நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற பலங்கள் பற்றியும், வாய்ப்புக்கள் பற்றியும், பலவீனங்கள் பற்றியும், அச்சுறுத்தல் அல்லது பயமுறுத்தல்கள் பற்றியும் ஒரு நிறுவனத் தலைவர் பகுப்பாய்வு செய்யும் ஆற்றலைக் கொண்டிருப்பாரானால், அவற்றின் அடிப்படையில் தனது நிறுவனத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்தக் கூடிய வலிமையை அவர் பெற்றுவிடுவார். இந்நான்கு வகையான காரணிகளும் எப்பொழுதும், ஒரு நிறுவனத் தில் காணப்படும். இவற்றில் எவற்றின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கின்றது என்பதன் அடிப்படையிலேயே முகாமைத்துவத்தின் வெற்றி தீர்மானிக்கப்படுகின்றது. இதற்காகவே ஒவ்வொரு நிறுவனத் தலைவர்களும் இவை தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்ள வேண்டும். அதுவே இன்று SWOT பகுப்பாய்வு என்று பேசப்படுகின்றது.

**SWOT பகுப்பாய்வு**

SWOT பகுப்பாய்வு என்பது ஒரு நிறுவனத்தின் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் ஆகிய வற்றை மதிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு உபாயத்திட்டமிடல் முறையாகும். ஒரு பாடசாலையில் இந்த நான்கு காரணிகளையும் வெளிப்படையாகவே இனங்காணலாம். இந்நான்கையும் பின்வரும் இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. **அகக் காரணிகள்**

அகக் காரணிகள் என்பன ஒரு பாடசாலையில் அல்லது ஒரு நிறுவனத்திற்குள்ளேயே அல்லது வீடு என்பதும் ஒரு நிறுவனம் என்ற வகையில் வீட்டில் கூடக் காணப்படும் காரணிகளாகும்: இவை,

- பலம்
- பலவீனம் ஆகியவற்றைக் குறிக்கும்

2. **புறக் காரணிகள்**

இவை பாடசாலைக்கு வெளியே ஒரு அதிபரின் கட்டுப்பாட்டிற்கு

அப்பால் உள்ள காரணிகளாகும்.ஆனால் ஒரு மிகச் சிறந்த ஆளுமை உள்ள அதிபர் இவற்றை மிகவும் சாதுரியமாகக் கையாளுவார்.

- வாய்ப்புக்கள்
- அச்சுறுத்தல் என்பன புறக்காரணிகளாகும்.

**பலம்:**

ஒரு பாடசாலையில் உள்ள பலங்களாக பின்வரு வனவற்றை இனங்காணலாம். இவை நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கொள்கை அடிப்படை யில் கிடைக்கின்ற வளமான அகக் காரணிகளாகும். ஒரு அதிபர் வினைத்திறன் மிக்கவராக இருந்தாலோ அல்லது செல்வாக்கு மிக்கவராக இருந்தாலோ இவை சிலவேளை களில் அதிகமாகக் கிடைக்கலாம். இவற்றின் பெறு மானங்கள் மாணவர் தொகை மற்றும் பாடசாலைத் தரம் என்பவற்றின் அடிப்படையில் கிடைத்துக்கொண்டே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். சிலவேளைகளில் இவற்றில் சில வளங்கள் தாமதமாகக் கூடக் கிடைக்கலாம். ஆனால் இவை ஒரு நியம அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

உதாரணமாக, வினைத்திறன் மிக்க அதிபர், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர், கட்டுப்பாடான மாணவர்கள், ஒத்துழைப்பை வழங்கும் பெற்றார், பழைய மாணவர்கள், ஆற்றலுள்ள கல்வி அலுவலர்கள்,பௌதிக வளங்கள் - கட்டடங்கள், மற்றும் ஏனைய உபகரணங்கள், இலவச பாடநூல்கள், உலக உணவுத் திட்டம் போன்றன. நிதி வளங்கள் - தர உள்ளீடு,வசதிகள் சேவைகள் கட்டணம், *SDS, SDC* நிதிகள், பாடசாலைகள் பெற்றுக்கொண்ட நற்பெயர், *(strong brand names)* பெற்றாரிடையே ஆழப்பதிந்துள்ள பாடசாலை தொடர்பான மனப்பதிவுகள்

இவை போன்ற பலங்கள் ஒரு பாடசாலையில் காணப்படுமானால், பின்வரும் விளைவுகள் வெளிக் காட்டப்படும்:

- பாடசாலையின் க.பொ.த. (சா/த),க.பொ.த (உ/த) போன்ற பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் மிக உயர்வாகக் காணப்படும்.
- மாணவர்களின் பாடசாலைக்குச் சேரும் தொகை அதிகரிக்கும்.
- பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் ஈடுபாடும், உதவி செய்யவேண்டும் என்ற அக்கறையும் அதிகரிக்கும்.
- மாணவர்களின் வரவு அதிகரித்துக் காணப்படுவதுடன், இடைவிலகலும் குறைவடையும். நல்ல கவர்ச்சியானதும், மகிழ்ச்சிகரமானதுமான கற்றல் சூழ்நிலை நிலவுகின்ற ஒரு பாடசாலைக்கு மாணவர்கள் விரும்பி வருவர்.
- பாடசாலையின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் சிறப்பாக இருப்பதுடன், அத்தகைய பாடசாலைகளே மாகாண அல்லது தேசிய நிலையில் உயர்ந்த இடத்தைப் பிடிக்கின்றன.
- பாடசாலையின் கவிவுநிலை கவர்ச்சிகரமான தாகவும், எல்லோராலும் விரும்பப்படும் இடமாகவும் இருக்கும். இன்றும் பல பாடசாலைகள் திட்டமிட்டு பூமரங்கள், கட்டிட வடிவமைப்பு போன்றவற்றை அழகாக வைத்திருக்கின்றன.
- மிகச் சிறந்த தொடர்பாடல் திறன் பாடசாலையின் அனைத்துத் தரப்பினர்களாலும் பேணப்படும். எங்கே வினைத்திறன் மிக்க தொடர்பாடல் நிலவுகின்றதோ அங்கே பயனுறுதி அல்லது விளைதிறன் என்பது எல்லா மட்டத்திலும் அதிகரித்துக் காணப்படும்
- வளங்களின் உச்சப்பயன்பாடு மிக உயர்வாக இருக்கும். பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயற்பாடு மற்றும் பெறுபேறுகள் தாழ்வாகக் காணப்படும் பொழுது, அதிபர்கள் அதற்கான காரணங்களைத் தேடிவைத்து மிகப் பொருத்தமாகக் கூறிவிடுவார்கள். கற்றல் சாதனங்கள் போதியளவு இல்லை என்றும், கட்டிடம் தளபாட வசதிகள் போன்றன பற்றாக்குறையென்றும், போதியளவு ஆசிரியர்கள் இல்லையென்றும், பெற்றாரின் அக்கறையின்மை என்றும் கூறிக்கொண்டே காரணங்களைக் அடுக்கிக் கொண்டு காலத்தைக் கடத்துகின்ற போக்கே பெரும்பாலான அதிபர்களிடம் காணப்படுகின்றன. ஒரு பாடசாலையில் இல்லாத வளங்களுக்காக ஏங்கிக்கொண்டிருப்பதை விட, இருக்கின்ற வளங்களை எவ்வளவுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பது தான் பிரதானமானது.

  அதேவேளை பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தர உள்ளீட்டு நிதி பெரும்பாலான பாடசாலைகளில் திட்டமிட்டுப் பயன்படுத்தப்படுவதில்லை என்ற குறை பலராலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பணத்தைக் கடைசி வரை வைத்திருப்பார்கள் வருடமுடிவில் போய் ஏதாவது எழுதுகருவிகள் மற்றும் பாடசாலைக் கற்றலுக்குப் பயன்படுத்த முடியாத பொருட்களை வாங்கிக் குவித்து விடுவார்கள். அதேவேளை கல்வித் திணைக்களத்தினால் அல்லது பழைய மாணவர் சங்கங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றால் வழங்கப்படுகின்ற கற்றல் உபகரணங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் போன்றவை அலுமாரிகளில் பூட்டி வைத்திருக்கின்ற நிலைமையை அநேகமான பாடசாலைகளில் காணலாம்

மேலும் ஆசிரியர் பற்றாக்குறையைக் காரணம் காட்டி எந்த ஒரு மாணவரினதும் கற்கும் உரிமைக்குத் தடைபோடக் கூடாது. "பலதரக்" கற்பித்தல் *(Multi grade teaching)* என்பது இன்று தான் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட ஒரு கற்றல் கற்பித்தல் உபாயமல்ல. பல வருடங்களுக்கு முன்னரே பல அதிபர்களாலும், ஆசிரியர்களாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட குழுமுறை ரீதியாக, செயற்பாட்டு வடிவிலான கற்றல் முறைதான் இன்று புதிய ஒரு கோட்பாட்டு வடிவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

ஆசிரியர் பற்றாக்குறை மிகவும் மோசமாக நிலவும் பாடசாலைகளில் மிகக் குறைந்த ஆசிரியர்களைக் கொண்டே வினைத்திறன் மிக்க கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியும் என்பதற்குச் சில பின்தங்கிய பாடசாலைகளின் பெறுபேறுகளை உதாரணங்களாகக் காட்டலாம். குழு ரீதியாகச் செயற்படுவதற்கு ஏற்ற வகையில் உபகரணப் பயன்பாட்டையும் செயல் அட்டைகளையும் தயாரித்து வைத்திருந்தால், ஒரு ஆசிரியரால் ஒரே நேரத்தில் 3 அல்லது 4 வகுப்புக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அமைதியாகவும், மகிழ்சிகரமானதாகவும் வினைத்திறனுடனும் கொண்டு நடத்தமுடியும்.

இத்தகைய கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக நிகழவேண்டுமானால், ஆசிரியர்களின் முன்னாயத்தமும், பாடத்திலான ஈடுபாடும் அவசியமானது. இன்று எத்தனை ஆசிரியர்கள் தமது அறிவை இற்றைப்படுத்துவதுடன், புதிய விடயங்களை மாணவர்களுக்குக் கூறக்கூடிய வகையில் ஆயத்த நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்? ஆசிரியர்கள் முன்கூட்டியே ஆயத்த நிலையில் இருந்தால்தான் மாணவர்கள் ஆயத்தநிலையை அடைவர்.


ஒரு பாடசாலையின் கல்வி அடைவைத் தீர்மானிக்கும் அத்தியாவசியக் காரணியாக கட்டிடங்கள் ஒருபோதும் குறிகாட்டிகளாக இருந்ததில்லை. அன்று வடக்கு கிழக்கில் யுத்தம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் எத்தனையோ பாடசாலைகள் குண்டுவீச்சினால் அழிக்கப்பட்டு, கட்டிடங்களே இல்லாத நிலையில், வளங்கள் எல்லாவற்றையும் இழந்து, மர நிழல்களின் கீழும், தற்காலிகக் கொட்டகைகளினுள்ளும் இடம்பெயர்ந்தும் கூட மிகச் சிறப்பான கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொண்டதுடன் அத்தகைய பாடசாலைகளில் மிக உயர்ந்த பெறுபேறுகள் கிடைத்தமையையும் கண்டிருக்கின்றோம். அன்று யுத்த சூழலில் வசதிகள் அற்ற நிலையில், பல நூறு மாணவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பிய பாடசாலைகளால், இன்று பௌதிக மற்றும் ஆளணி வசதிகள் நிறைந்த நிலையில் ஏன் செயற்பட முடியவில்லை?

**பலவீனம்:**

இவை ஒரு பாடசாலையின் வினைத்திறனற்ற அதிபர் அல்லது பலவீனமான பழைய மாணவர் சங்கங்கள் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது அக்கறையற்ற பெற்றோர் என்பவர்களின் முயற்சிகள் அல்லது அக்கறையின்மை காரணமாக மேலே குறிப்பிட்ட பலமான காரணிகளுக்கு எதிர் மறையான காரணிகள் காணப்படலாம். உதாரணமாக ஒரு பாடசாலையின் அதிபர் வினைத்திறனற்றவராக இருந்தால், அவர் அந்தப் பாடசாலையின் ஒரு பலவீனமான காரணியாகவே காணப்படுவார். பலவீமான ஒரு அதிபரின் முகாமைத்துவத்தின் கீழ் முன்னர் இருந்த பலமான காரணிகள் கூட பலவீனமானவையாக மாறிச் சென்று அந்தப் பாடசாலை மிக மோசமான நிலைக்குப் பின்தள்ளப்படும்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்மூலம் பலங்களின் மறையான நிலைகள் தோற்றம் பெறும் பொழுது சரியான மேற்பார்வை, வழிகாட்டல்கள் இல்லாமையால்,கற்பித்தல் திறன் குறைந்த, வினைத்திறனற்ற ஆசிரியர்கள் தோற்றம் பெறுவார்கள்.

**இத்தகைய ஆசிரியர்களே,**

- பாடசாலைக்குத் தாமதமாக வருபவர்களாக இருப்பர்.
- மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் ஏனோ தானோ என்று காணப்படுவர்.
- மாணவர்களின் குழுச்செயற்பாடு, மீள வலியுறுத்தல், மற்றும் மதிப்பீட்டின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யமுடியாதவர்களாக இருப்பர்.
- அதிகளவு நாட்கள் விடுப்பில் நிற்பவர்களாக இருப்பர். இவர்களில் பலர் சம்பளமற்ற விடுப்பில் கூட இருப்பர்.
- பாட ஆயத்தங்களைச் செய்யாது வெறுங்கையுடன் வருபவர்களாக இருப்பர்.
- கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தாது, வெறுமனே வாயையும், பாடப் புத்தகத்தையும், வெண்கட்டியையும் மட்டும் வைத்து வகுப்பறை நேரத்தை விரயமாக்கி விட்டுச் சென்று விடுபவர்களாக இருப்பர்.

இவர்களைப் போன்றவர்களுக்கான சரியான வழிகாட்டும் ஆற்றல் அதிபரிடம் இல்லாத போது, ஆசிரியர்களும் அவரைப் போன்றே உருவாகிவிடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

**வாய்ப்புக்கள்:**

ஒரு பாடசாலை அல்லது நிறுவனத்திற்கு வெளியில் இருந்து கிடைக்கின்ற அனைத்து உதவிகளும் வாய்ப்பாகவே கருதப்படும். வாய்ப்புக்கள் எப்பொழுதும் எல்லாருக்கும் கிடைப்பதில்லை. அதிர்ஷ்டம் ஒரு முறைதான் கதவைத் தட்டும் என்று கூறுவதுபோல், வாய்ப்புக்கள் கிடைத்தால் அதனை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒருமுறை கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டால் மீண்டும் அந்த வாய்ப்புத் தேடிவரும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா?

உதாரணமாக, பாடசாலை அல்லது கல்வித் திணைக்களம் தவிர்ந்த ஏனைய அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசியல்வாதிகள், ஊடகத் துறையினர், வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், நலன் விரும்பிகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி வர்த்தக வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, HNB,சனச அபிவிருத்தி போன்ற வர்த்தக வங்கிகள், ஊரில் வசிக்கும் கொடையாளிகள் போன்றன பாடசாலைக்கு வெளியில் இருந்து கிடைக்கும் வாய்ப்புக்களாகும்.

அதேவேளை பழைய மாணவர் ஒருவர் புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து ஒரு தொகை நிதியைப் பாடசாலைக்கு வழங்கினால் அது பலமேயன்றி வாய்ப்பல்ல என்பதை அதிபர்கள் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். பழைய மாணவர் என்பது அந்தப் பாடசாலையின் பலமான காரணியாகும். பல அதிபர்கள் தமது வாக்கு சாதுரியத்தாலோ வினைத்திறன் மிக்க தொடர்பாடலின் மூலமோ தேவையான வளங்களைப் பெற்று பாடசாலைகளை உச்ச நிலைக்குக் கொண்டுவந்து விடுவார்கள். ஒரு பாடசாலையின் வளர்ச்சி கருதி வாய்ப்புக்களைப் பயன்படுத்த விரும்பும் அதிபர்களிடம் வரட்டுக் கௌரவமோ அல்லது பிடிவாதமோ இருக்கக்கூடாது. ஒரு நிறுவனத்தின் முதனிலை முகாமையாளர் என்ற வகையில் பாடசாலை என்ற நிறுவனம் தான் மேலோங்கி நிற்கவேண்டுமேயொழிய தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கோ அல்லது அரசியல் அழுத்தங்களுக்கோ முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. அத்தகையவர்களை வினைத்திறன் மிக்க முகாமையாளர்கள் என்று எவ்வாறு அழைக்க முடியும்?

**அச்சுறுத்தல்கள்**

இவையும் கூட பாடசாலைக்கு வெளியில் இருந்தே ஏற்படுத்தப்படுகின்றன. சமூக அங்கீகாரத்தை ஒரு பாடசாலை இழந்து வரும் பொழுது வெளியில் இருந்து படிப்படியாக அச்சுறுத்தல்களும் ஏற்படத் தொடங்கும். வினைத்திறனற்ற அதிபர், ஆசிரியர்கள் ஒரு பாடசாலையில் ஒன்றாகக் குவிக்கப்படும் பொழுது, அந்தப் பாடசாலையின் வினையாற்றலும் செயற்பாடுகளும் வீழ்ச்சியடையத் தொடங்கும். இது காலப்போக்கில் பாடசாலையை மூடிவிடும் அளவுக்கு நிலைமையைத் தோற்றுவித்துவிடும்

உதாரணமாக, வெளியார் தலையீடுகள், அரசியல்வாதிகள், ஊடகங்கள், இயற்கை மற்றும் மனிதர்களால் மேற்கொள்ளப்படும் பேரழிவுகள், டெங்கு, எயிட்ஸ் போன்ற தொற்றுநோய்களின் தாக்கங்கள்,கால்நடைகளின் தொந்தரவுகள்,ஆலய உற்சவங்களின் பொழுது பாடசாலை நேரத்தில் அலறிக் கொண்டிருக்கும் ஒலிபெருக்கிகள் போன்ற காரணிகள் ஒரு நிறுவனத்திற்கு வெளியில் இருந்து ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களாகும். ஆனால் அதேவேளை பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கும் குறும்புத்தனமான மாணவனோ அல்லது கற்பிக்கும் ஆசிரியரோ, அதிபருக்ரோ அல்லது ஏனையவர்களோ பாடசாலைக்கு வெளியில் அச்சுறுத்துபவர்களாக இருந்தால், அது அந்தப் பாடசாலையின் பலவீனமாகுமே ஒழிய அது அச்சுறுத்தல் அல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலையின் வினைத்திறனை அதிகரித்தல்:**

இன்று அதிபர்களின் முன்னால் பல்வேறு வேலைச் சுமைகளும், பொறுப்புக்களும் அதிகரித்துக் காணப்பட்டாலும், பாடசாலையின் அடிப்படைக் குறிக்கோள்களையும், இலக்குகளையும் விட்டு விலகிச் சென்றுவிட முடியாது. பாடசாலை முகப்பில் அழகாக "மகுடவாசகம்" தூரநோக்கு, பணிக்கூற்று போன்றவற்றை எழுதிக் காட்சிப்படுத்தினாலும் அதற்கு அமைவாகச் செயற்படும் வகையில் திட்டமிடல் அவசியமாகும்.

பாடசாலைகளில் காணப்படுகின்ற பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் போன்ற காரணிகள் சரியான முறையில் இனங்காணப்பட்டு அவை ஒவ்வொன்றும் எந்தெந்த வடிவில் அல்லது யார் யார் வடிவில் இருக்கின்றன என்பதை அதிபர் சரியாக இனங் காணமுடியும். சில வேளைகளில் ஒரு சிறிய பதவி அணிதானே என்று சாதாரணமாகக் கருதிப் புறந்தள்ளி விடுகின்ற "சிற்றூழியர்" ஒருவரே பலவீனமானவராகப் பாடசாலைக்குள் இருந்து கொண்டு, பாடசாலைக்கு வெளியே வேறு நபர்கள் மூலம் அச்சுறுத்தலையும் ஏற்படுத்துபவராகவும் இருக்கக்கூடும். இத்தகைய பலவீனமானவர்களை இனங்கண்டு, அவர்களைப் பாடசாலைக்குள்ளேயே வைத்துப் பலமானவர்களாக மாற்றக்கூடிய தந்திரோபாயத்தை ஒரு அதிபர் கையாள வேண்டும். அத்தகையவர்களை வெளியில்விட்டால் அவர் அச்சுறுத்தலாக மாறும் நிலை ஏற்பட அதிபர் பாடசாலையை விட்டே வெளியேறும் நிலை ஏற்படலாம்.

ஒரு நிறுவனத்தில் மிகச் சிறப்பான முகாமைத்துவம் நிலவ வேண்டுமானால், அங்கே பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் ஆகியவற்றில் பலம், மற்றும் வாய்ப்புக்களை மட்டுமே அதிபர் அல்லது நிறுவனத் தலைவர் வளர்த்துக்கொண்டு ஏனைய பலவீனம், அச்சுறுத்தல் ஆகியவற்றின் அளவின் வீதத்தைக் குறைக்க வேண்டும், அல்லது இல்லாமல் செய்து விடவேண்டும்.

| அகக் காரணிகள் | புறக் காரணிகள் |
|---|---|
| பலம்<br>*Strength* | வாய்ப்புக்கள்<br>*Opportunity* |
| பலவீனம்<br>*Weakness* | அச்சுறுத்தல்<br>*Threatening* |

வினைத்திறன் மிக்க ஒரு அதிபரோ அல்லது குடும்பத்தின் தலைவரோ அல்லது ஒரு திணைக்களத்தின் பணிப்பாளரோ இந்த நான்கு வகைக் காரணிகளில் முடிந்தவரை தனது நிறுவனத்தில் காணப்படுகின்ற பலவீனங்களைப் பலமான காரணிகளாகவும், அச்சுறுத்தல்களை வாய்ப்புக்களாகவும் மாற்றுவதற்கான உபாயங்களைக் கையாள வேண்டும்.


உதாரணமாக, பாடசாலையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர் ஒருவரால் கற்றல் சாதனங்களைத் தயாரிக்கவோ அல்லது மாணவர்கள் இலகுவாகச் செயற்பாட்டில் ஈடுபடும் வகையில் அவற்றைக் கையாளும் முறை பற்றியோ இடர்ப் படுவாரானால், அவரை அந்தத் துறையில் பாண்டித்தியம் அடையச் செய்வதற்காக அதிபர் தொடர்ச்சியான உள்ளகப் பயிற்சியை ஒழுங்கு செய்து கற்றல்-கற்பித்தல் அனுபவத்தை களத்தில் வைத்தே வழங்கி வரும் பொழுது, அந்த ஆசிரியரின் வினையாற்றல் அதிகரிக்க மாணவர்களும் விருப்பத்துடன் கற்கத் தொடங்க அவரது பலவீனம் அகன்று, பலமானவராக மாற்றப்படுவர். அதை விட்டு அந்த ஆசிரியருக்குத் தண்டனை வழங்குவதன் மூலமோ அல்லது இடமாற்றம் வழங்குவதோ தீர்வாக மாட்டாது. இதேபோன்று இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலவீனமான காரணிகளையும் பலமானவையாக மாற்ற அதிபர் முயற்சிக்க வேண்டும்.

இதேபோன்று ஒரு அரசியல்வாதியினாலோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராலோ பாடசாலைக்கும் பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கும் அச்சுறுத்தல் அல்லது வெறுப்புணர்வு தோன்றினால், பாடசாலைக்கான வளங்கள் குறைக்கப்படலாம், அல்லது அவர்களால் ஆசிரியர்களோ அதிபர்களோ பழிவாங்கப்படலாம். இதன் மூலம் ஒரு அரசியல்வாதியுடன் எந்த ஒரு அரசாங்க உத்தியோகத்தராலும் நின்று பிடிக்கமுடியாது. அவர்களை எவ்வாறு பாடசாலை வளர்ச்சிக்கான வாய்ப்பான காரணிகளாக மாற்றமுடியும்? பாடசாலையில் நிகழும் ஏதாவது ஒரு வைபவத்திற்கு அவரையும், அவரது மனைவியையும் முதன்மை அதிதிகளாக அழைப்பதற்காக மூன்று அல்லது நான்கு பெற்றாரையும், சில பழைய மாணவர்களையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்று வந்தால், அச்சுறுத்தல் காரணியாக இருந்து வந்த அவரை வாய்ப்பான காரணியாக மாற்றிவிடலாம்.

எனவே இவ்வாறு ஒரு நிர்வாகி சரியானவற்றைச் சரியான நேரத்தில், தனது நிறுவனம் சார்ந்து எடுப்பாரேயானால், அந்த நிறுவனத்தில் பலவீனமும், அச்சுறுத்தலும் காலப்போக்கில் அகன்று, பலமும் வாய்ப்புமே எஞ்சி நிற்கும். அதன் பின்னர் பாடசாலையின் வளர்ச்சியானது எந்த சக்தியாலுமே தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு உயர்ந்து செல்லும். அதிபர்களே துணிவுடன் செயலாற்றுங்கள், உங்களைப் பற்றிய விமரிசனங்கள் நேர்த் தன்மையானவையாக மாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கி.புண்ணியமூர்த்தி

# பாடசாலைகளின் விளைதிறன் விருத்தியில் ஆசிரியர் ஊக்குவிப்பின் பங்களிப்பு

இலங்கையின் மிகப்பெரிய ஒழுங்கமைப்பாகப் பாடசாலைகளையே கருதமுடியும். அவ்வாறான பாடசாலைகளில் மிக உயர்ந்த மனிதவளமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். பாடசாலைகளின் நோக்கம், குறிக்கோள்களை அடையச் செய்விப்பதில் இவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். இலங்கையின் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பரம்பலை 2008ம் ஆண்டு பாடசாலைப் புள்ளி விபரங்களின் அடிப்படையில் பின்வருமாறு வெளிப்படுத்த முடியும்.

| ஆசிரியர்கள் | தொகை |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 74,218 |
| பயிற்சி ஆசிரியர்கள் | 127,382 |
| பயிற்சியற்ற ஆசிரியர்கள் | 7,322 |
| பயிற்சி பெறும் ஆசிரியர்கள் | 2,659 |
| வேறு ஆசிரியர்கள் | 1,102 |
| மொத்தம் | 212,683 |

இலங்கையைப் பொறுத்தவரையில் பாடசாலைக் கல்விச் செயன்முறையில் மிகவும் செயலூக்கத்துடன் செயற்படுபவர்கள் ஆசிரியர்களாவர். அரச, அரச உதவி பெறுகின்ற, தனியார், சர்வதேச பாடசாலைகளில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் பல்வேறு வயது மட்டத்தைச் சேர்ந்தவர்களாக, பல்வேறு தகைமைகளைக் கொண்டவர்களாக, பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்களாக, பல்வேறு சேவைக்காலங்களைக் கொண்டவர்களாக, பல்வேறு பதவிநிலைகளைக் கொண்டவர்களாக, பல்வேறு வேதன மட்டங்களைக் கொண்டவர்களாக, பல்வேறு பிரதேசங்களிலிருந்து வருகை தருபவர்களாக, பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற அதேவேளை அவர்கள் பாடசாலைகளில் பல்வேறு பாடங்களைக் கற்பிப்பவர்களாகவும் உள்ளனர். இதனால் அவர்களது செயற்பாடுகளும், அவர்களது தேவைகளும், விருப்புக்களும் கூடப் பல்வகைமை கொண்டனவாக அமைந்து காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கற்பிக்கின்ற பாடசாலைகளின் வகைகளைப் பொறுத்தும் அவர்களது சமூகநிலைமை தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பாக வகை III பாடசாலை ஆசிரியரை விட IAB பாடசாலை ஆசிரியர்கள் சமூக அங்கீகாரம் பெற்றவர்களாகவும் அதிக தொழில் திருப்தி பெற்றவர்களாகவும் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் பாடசாலை வகைகளின் அடிப்படையில் ஆசிரியர் பரம்பல் பின்வருமாறு காணப்படுகிறது.

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| IAB | 57,138 |
| IC | 67,368 |
| வகை II | 67,971 |
| வகை III | 20,206 |
| **மொத்தம்** | **212,683** |
| **மூலம் - பாடசாலை தொகைமதிப்பீட்டு அறிக்கை, 2008** | |

மேலும் இலங்கையில் 1 அல்லது 2 ஆசிரியர்கள் மாத்திரம் கடமையாற்றும் பாடசாலைகள் நூற்றுக்கு மேல் இருப்பதைக் காண்கிறோம். அதேபோல் நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடமையாற்றும் பாடசாலைகளும் நூற்றுக்கு மேல் இருப்பதையும் காண்கிறோம். பெருமளவு ஆசிரியர்கள் கற்பிக்கின்ற பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களைவிட 1 அல்லது 2 ஆசிரியர்கள் மாத்திரம் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தொழில் திருப்தி குறைந்தவர்களாக நடந்துகொள்வதை அவதானிக்க முடிகிறது.

பாடசாலை, ஆசிரியர் விகிதாசாரம்

| பாடசாலை வகை | தொகை |
|---|---|
| 1 ஆசிரியர் மாத்திரம் உள்ள பாடசாலைகள் | 120 |
| 2ஆசிரியர்கள் மாத்திரம் உள்ள பாடசாலைகள் | 209 |
| 3-9 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் | 2,616 |
| 10-25 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் | 4,234 |
| 26-50 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் | 1,625 |
| 51-100 ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் | 671 |
| 100க்கு மேல் ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகள் | 187 |
| **மொத்தம்** | 9662 |
| **மூலம் - பாடசாலை தொகைமதிப்பீட்டு அறிக்கை, 2008** | |

ஒரு நிறுவனத்தின் குறிக்கோளை அடையச் செய்விக்கும் நோக்கில் பணியாளர்களை ஊக்குவிப்பதற்காக நிறுவனத்தின் நிலமையை ஒழுங்கமைத்தலை ஊக்குவித்தல் எனலாம். மேலும் ஊக்குவிப்பு என்பது ஒரு நிறுவனத்தின் பணியாளர்களிடம் இருந்து உச்ச பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களது விருப்புக்களையும், திருப்திகளையும் அடைவிக்கச் செய்வதற்காக நிறுவனத்தின் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் எடுக்கும் முயற்சியை ஊக்குவிப்பு எனலாம். (சந்திரகுமார 1998)

மேலுள்ள தரவுகளின்படி 2,12,000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படும் நிலையிலுள்ளனர் என்பது பெரும் சவாலான விடயமாகும். ஆசிரியர் ஊக்குவிப்பில் பல்வேறு விடயங்கள் செல்வாக்குச் செலுத்துவனவாக உள்ளன. குறிப்பாக,

[1] பெருமளவு பணியாளர்கள் சேவையாற்றுவது.

[2] ஒவ்வொருவரினதும் தொழில் அனுபவங்கள், தகைமைகள், தேவைகள், மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் போன்றவை பல்வகைமை சார்ந்தவையாகக் காணப்படுவது.

[3] ஆசிரியர்கள் பல்வேறு வசதிகளைக் கொண்ட பல்வேறு சூழல்களில் காணப்படும் பாடசாலைகளில் சேவையாற்றுபவர்களாக இருப்பது.

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எனினும் பாடசாலை ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முக்கிய பொறுப்பை வகிப்பவர் அவர்களின் அண்மித்த மேலதிகாரியாகிய பாடசாலை அதிபராவார். ஆசிரியர்களின் தேவைகளை உடனுக்குடன் இனங்கண்டு அவற்றை இயன்றவரை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய முக்கிய பொறுப்பு அதிபருடையதாகும். ஆசிரியர்களின் தேவைகளைப் பூர்த்தியடையச் செய்விப்பதினூடாக ஒரு அதிபர் தனது முகாமைத்துவச் செயற்பாடுகளை இலகுவாகப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும். எனினும் பல்வகைமையைக் கொண்ட ஒருவரது தேவைகளைப் பூர்த்தி செய்வதும், அவரைத் திருப்தியடையச் செய்விப்பதும் இலகுவான காரியமல்ல. இதனை அடிப்படையாகக் கொண்டே ஊக்கல் எனும் தனியாள் நடத்தையைத் தீர்மானிப்பது ஒவ்வொருவரதும் உள்ளத்து நிலையைப் பொறுத்ததாகும் என செர்டோ *(Certo,2002)* குறிப்பிடுகிறார்.

### 1. தேவைகள்

ஊழியர்களின் தேவைகள் நிறைவேற்றப்படும் போது அவர்கள் தொழில் திருப்தியுடன் பணியாற்றத் தூண்டப்படுவர். இதனூடாக நிறுவனக் குறிக்கோளை அடைவிக்க வேண்டும் என்ற ஊக்கம் தனியாளில் இயல்பாகவே ஏற்படும் என றொபின்ஸ் *(Robins 1995)* குறிப்பிடுகிறார்.

கிறிபின் *(Griffin,R.W 1998)* ஊக்குவிப்புச் செயற்பாடுகள் தொடர்பாகப் பின்வரும் சட்டகம் ஒன்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துகிறார். அது பின்வரும் அமைப்பைக் கொண்டதாகும்.

எதிர்காலத் தேவைகள் தொடர்பான தீர்மானமும்,
திருப்தியடைவித்தல் தொடர்பான தெரிவும்

↑

தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதனை மதிப்பீட்டுக்குட்படுத்துதல்

↑

தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான உத்தேசத் தெரிவு

↑

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளைத் தேடுதல்

↑

தேவைகள்

எதிர்காலத் தேவைகள் தொடர்பான தீர்மானமும், திருப்தியடைவித்தல் தொடர்பான தெரிவும் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதனை மதிப்பீட்டுக்குட்படுத்துதல் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான உத்தேசத் தெரிவு, தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகளைத் தேடுதல், தேவைகள், பாடசாலைகளில் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை மேற் கொள்ளும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது ஒரு அதிபரின் முகாமைத்துவ வகிபாகமாகும். பாடசாலைச் சமூகத்தைப் பொறுத்தவரையில் அதனை இரு வகுதிகளுக்குள் உள்ளடக்கலாம்.

[1] பாடசாலையின் உள் சமூகம்

[2] பாடசாலையின் வெளிச் சமூகம்

இவ்விரு சமூகத்தினதும் முக்கிய பணியாக அமைவது பாடசாலைப் பணியாளர்களை உற்சாகப்படுத்துவதினூடாகப் பாடசாலை அடைய எதிர்பார்க்கும் நோக்கத்தை அடையச் செய்விப்பதாகும்.

## 2. ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளத்தக்க செயற்பாடுகள்

ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காகப் பின்வரும் செயற்பாடுகள் போன்ற பல்வேறு செயற்பாடுகளை அதிபர்கள் மேற்கொள்ள முடியும்.

[1] பாடசாலையின் முக்கிய தீர்மானங்களை மேற் கொள்ளும்போது ஆசிரியர்களின் பங்குபற்றுதல் களை உறுதிப்படுத்துதல்.

[2] ஆசிரியர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டங் களை ஆரம்பித்தல்.

[3] பதவி உயர்வுக்குச் சிபாரிசு செய்தல்.

[4] சம்பள உயர்ச்சிகளை வழங்குதல்.

[5] பாராட்டுதல்களையும், பரிசில்களையும் வழங்குதல்.

[6] ஆசிரியர் தின நிகழ்வுகளை ஏற்பாடுசெய்து கௌரவித்தல்.

[7] சுதந்திரமாகக் கடமையாற்றச் சந்தர்ப்பம் வழங்குதல்.

[8] நலனோம்பல் வசதிகளை ஏற்பாடுசெய்தல்.

[9] நெகிழ்ச்சியான நிர்வாக முறைமையைப் பின்பற்றுதல்.

[10] ஆசிரியர்களுக்கு இயன்றளவு சுதந்திரத்தை வழங்குதல்.

[11] ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பதவிகளை வழங்குதல்.

[12] பொழுதுபோக்குச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.

[13] புலமைப்பரிசில்கள் கிடைக்க ஏற்பாடு செய்தல்.

சர்ப்பியோவாஹி (1973) என்பவர் ஆசிரியர்களை ஊக்குவிப்பது தொடர்பான காரணிகள் சிலவற்றை முன்வைக்கிறார். அவையாவன:

[1] ஆசிரியர்களை அங்கீகரித்தல்.

[2] விருத்திக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.

[3] ஆளிடைத் தொடர்பை விருத்தி செய்தல்.

[4] பொறுப்புக்களை வழங்குதல்.

[5] மேற்பார்வை செய்தல்.

இவை போன்றவை ஆசிரியர்களின் ஊக்குவிப்பைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். வொன்க்ரூ, வொன்க்(2005) ஆகியோர் மேற்கொண்ட "தொழில்திருப்தி" தொடர்பான தமது ஆய்வில் பதவி உயர்வுகளை வழங்குதல் பொதுவாகப் பணியாளர்களை ஊக்குவிக்கின்ற ஒரு முக்கிய செயன்முறையாகும் எனக் குறிப்பிடுகின்றனர். அது தவிர பணியாளர்களுக்கு நியாயமானதும், தொடர்ச்சியானதுமான வேதன முறைமையை ஏற்பாடு செய்தல் முக்கிய ஊக்குவிப்பு முறைமையாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அனேகமான பாடசாலை நிர்வாகிகள் தமது ஆசிரியர்களுக்கு, மனோ தைரியத்தை ஏற்படுத்துவதற்காகவும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும், "பங்குபற்றும் நிர்வாக முறைமை"யைப் பிரயோகிக்கின்றனர். அது தவிர சேவைக்காலக் கல்வியும், பரிகார மேற்பார்வையும் அதிபர்கள் உபயோகப்படுத்துகின்ற பிரதான முறைமைகளாகும் என எலிஸ்(1984) தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்லர்(1997) அதிபரின் தலைமைத்துவம் ஆசிரியர்களின் தொழில் திருப்தியில் செல்வாக்குச் செலுத்துகின்ற முக்கிய காரணி எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துகோரள 2001 இல் மேற்கொண்ட ஆய்வின்படி ஆசிரியர் தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தக் கூடிய, அவர் அதிக விருப்புடன் செயலாற்றக்கூடிய பாடங்களை அவருக்கு வழங்குவதுடன், அவ்வாறான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களையும் வழங்குதல் அவர்களை ஊக்குவிக்கின்ற முக்கிய விடயங்களாக அமைகின்றன. அதற்கு மேலதிகமாக அதிபர், ஆசிரியர்கள் மேல் நம்பிக்கை வைத்தல், உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குதல், ஆக்கரீதியான கருத்துக்களை வகுப்பறைக் கற்பித்தலின்போதும் பாடசாலையின் அன்றாடச் செயற்பாடுகளின்போதும் முன்வைப்பதற்கும் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் சந்தர்ப்பமும், கால அவகாசமும் வழங்குதல் போன்றவை அவர்களுக்கு சிறந்த ஊக்குவிப்பாக அமைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பட் என்பவரும் லான்ஸ் என்பவரும்(2005) ஐக்கிய இராச்சியத்தில் மேற்கொண்ட ஆய்வில் ஆசிரியர்களின் ஊக்குவிப்புத் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய செயற் பாடுகள் சிலவற்றை முன்வைக்கின்றனர் அவையாவன:

[1] அதிகாரிகளின் தலையீட்டினைக் குறைத்தல்.

[2] கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

[3] ஆசிரிய உதவியாளர்களைப் பெற்றுக்கொடுத்தல்.

[4] அதிகளவு தரஉள்ளீடுகளை வழங்குதல்.


[5] ஆசிரியர்களின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்குப் போதிய அவகாசம் வழங்குதல்.

[6] பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

இவற்றுக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் செயற்படும் காலத்தைக் குறைத்தல் அவர்களை ஊக்கப்படுத்தாத ஒரு விடயமாகும். அதேவேளை பணியின் அளவைக் கூட்டுதலும் அவர்களை ஊக்கப்படுத்தாத ஒரு விடயமாகும் எனத் தெரிவித்துள்ளனர்.

### 3. இன்றைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியதன் அவசியம்

இலங்கையில் ஆசிரியத் தொழிலில் தம்மை இணைத்துக்கொண்ட அனைவரும் தொழில் திருப்தியுடன் கடமையாற்றுகின்றார்கள் எனக் குறிப்பிட முடியாது. ஆசிரியத் தொழிலைத் தமக்கு நேர்ந்த விபத்து என்று குறிப்பிடுபவர்களும் உண்டு. இன்று தமது தொழில் தொடர்பாகப் பல்வேறு குறைபாடுகளையும், திருப்தியின்மைகளையும் வெளிப்படுத்தும் ஆசிரியர்கள்



அதிகரித்துக்கொண்டு வருகின்றனர். கடமைக்காகக் கடமை புரிபவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இத்தொழில்மீது காட்டும் ஊக்கம் குறைவடைந்து வருகின்றது தொழில் ஒன்று தேவை என்பதற்காக இத்தொழிலைப் புரிவதாகக் கூறுபவர்களின் தொகையும் அதிகரித்துள்ளது. உண்மையான ஆத்ம திருப்தியுடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்றுகின்றவர்கள் மிகச் சிலராகவேயுள்ளனர்.

2006 இல் வெளியிடப்பட்ட "ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முறை யாது" என்னும் அறிக்கையும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. இன்று ஆசிரியத் தொழிலை சமூகம் மதிக்காத சூழ்நிலை அதிகரித்துச் செல்வதாக இவ் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அத்துடன் நடைமுறையில் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காகப் பின்பற்றப்படும் முறையியல்கள் கல்வியின் இலக்குகளை அடைவதற்குப் பொருத்தப்பாடுடையனவாகக் காணப்படவில்லை எனவும் இவ் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

கொத்தலாவல(1995) கற்பித்தலில் விருப்பைக் காட்டும் ஆசிரியர்கள் ஆத்ம திருப்தியை அனுபவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கஸ்டப் பிரதேசங்களில் குறைந்த வளங்களுடன் கூடிய பாடசாலைகளில் கற்பிப்பவர்கள் பெற்றுக்கொள்ளும் தொழில் திருப்தி குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாக இவர் குறிப்பிட்டுள்ளார்.


வோக்லர்(1997) என்பவர் தனது ஆய்வில் ஊக்கத்தைப் பெறும் ஆசிரியர் தனது காலத்தையும், சக்தியையும் அதிக விருப்புடன் மாணவர்களுக்காகச் செலவிடுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளும் தொழில் திருப்தி முழுநாட்டினது கல்வி அமைப்பிலும் பாரிய செல்வாக்குச் செலுத்துகிறது. கல்விக்காகச் செலவிடும் பெருந்தொகைப் பணத்திற்குரிய பலனை அனுபவிப்பது ஆசிரியர் பெறும் தொழில் திருப்தியிலேயே தங்கியுள்ளது. குணசேகர(2001) குறிப்பிடும்போது 21ம் நூற்றாண்டில் கல்வியில் புரட்சியை ஏற்படுத்தும் தலைவர்களாக ஆசிரியர்களே உள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## 4. ஊக்கல் பற்றிய கொள்கைகளின் பொருத்தப்பாடு

ஏப்ரகாம் மாஸ்லோவினால் 1949ம் ஆண்டு தனது தொழில் அனுபவங்களின் அடிப்படையில் வெளியிடப் பட்ட தேவைப் படிமுறைக் கொள்கையின்படி பூர்த்தியடையாத தேவைகளைப் பூர்த்தியடையச் செய்வதற்காக ஒருவர் எப்போதும் முயற்சித்துக் கொண்டிருப்பார். அது தவிர அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலேயே ஒருவர் மேல் நோக்கிய தேவைகளில் தனது விருப்பினைச் செலுத்துவார்.




மாஸ்லோவின் கோட்பாட்டின்படி ஒரு அதிபர் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கு முன்னர் அவர்களது தேவைகளை இனங்காணுதல் வேண்டும் அவ்வாறு இனங்காணப்பட்டால்தான் பொருத்தமான ஊக்குவிப் பினைத் தெரிவுசெய்து வழங்குவதற்கு இயலுமானதாக இருக்கும்


*Frederia Herzberg* வெளிப்படுத்திய இரு காரணிக்கொள்கையில் அவர் "ஆரோக்கிய காரணிகள்" *(Hygiene Factors)*, "ஊக்கல் காரணிகள்" *(Motivational Factors)* என இரு காரணிகளை எடுத்துக்காட்டுகிறார் இதன்படி இவையிரண்டிலும் ஆரோக்கியக் காரணிகள், ஒருவர் திருப்தியின்மையைப் பெறாமல் இருப்பதனை உறுதிசெய்ய உதவுகின்றன. ஆனால் ஊக்கல் காரணிகள், பணியாளர் ஒருவர் உயர்மட்டத்திலான வினையாற்றலை வெளிப்படுத்துவதற்கு அவரை ஊக்குவிக்கின்றன.

ஆரோக்கியக் காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ள முடியும்.

- நிறுவனத்தின் கொள்கையும் முகாமைத்துவமும்
- மேற்பார்வை
- சகபாடிகளுடனான இடைத்தொடர்
- வேதனம்
- கடமை நிலைமை

ஊக்கல் காரணிகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ள முடியும்

- அடைவு
- அங்கீகாரம்
- வேலையின் தன்மை
- பொறுப்பு
- முன்னேற்றம்




மேலே படத்தில் காட்டப்பட்டவாறு இருகாரணிக் கோட்பாட்டின்படி ஆரோக்கியக் காரணிகளைப் பெற்றுக் கொள்வதினூடாக ஒரு தனியாளின் திருப்தியின்மை படிப்படியாகக் குறைவடைந்து திருப்தி அல்லது அதிருப் தியற்ற நிலைமைக்கு அவர் உட்படுவார். இந்நிலைமை யிலுள்ள ஒருவருக்கு ஊக்கல் காரணிகளைப் பயன்படுத்து வதினூடாக அவரது திருப்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

ஆரோக்கியக் காரணிகள் வழங்கப்படாத சந்தர்ப்பங் களில் பணியாளருக்குத் தொழில் தொடர்பான அதிருப்தியே மேலோங்கிக் காணப்படும். அதேபோல் ஊக்கல் காரணி கள் வழங்கப்படாதபோது பணியாளரில் திருப்தி ஏற்படாது. ஊக்கலில் தனியாள் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பானதாகும். அதேவேளை சிலரிடம் ஆரோக்கியக் காரணிகளே ஊக்கல் காரணிகளாகவும் காணப்படும்

தேவைக்கோட்பாடு தொடர்பாகவும் இருகாரணிக் கோட்பாடு தொடர்பாகவும் பல்வேறு விமரிசனங்கள் எழுப்பப்படும் அதேவேளை ஒரு பணியாளர் ஊக்குவிக் கப்படாவிட்டால் அவர் தான்செய்யும் தொழிலில் வெறுப்புக் குட்பட்டு வேறு தொழிலை நாடிச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதற்கு இடமுண்டு என்பதில் சந்தேகமில்லை.


எனவே இலங்கையில் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அவற்றின் இலக்கினை அடைவதா னால் ஆசிரியர்கள் முறையாக ஊக்குவிக்கப்படுதல் வேண்டும் என்பதனை பாடசாலை அதிபர்களும் கல்விசார் அதிகாரிகளும் உணர்ந்து செயற்படுவது இன்றைய கட்டாயத் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடங்கல் வகுப்பறை:
# மாணவர்களுக்கான பெற்றோரது பங்கேற்பு



வேலும் மயிலும் சேந்தன்



விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் அவர்தம் பெற்றோர்கள் முக்கியமான வகிபங்கை ஏற்க வேண்டியவர்கள் ஆவார்கள் இவர்களது. வகிபங்கின் முக்கியத்துவம் கருதி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இதற்கான சட்டங்களும் நடைமுறையில் உள்ளன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் விசேட தேவையுடைய மாணவர்களது பெற்றோரது பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்ட அளவே உள்ளது. இதற்கு பெற்றோரதும் சமூகத்தினதும் விசேட தேவையுடைய மாணவர்களது இயலாமை, மற்றும் குறைபாடு குறித்த மனநிலையே காரணமாகின்றது.

விசேட தேவையுடைய பிள்ளைகளை உடைய பெற்றோர் தமது பிள்ளைகளது இயலாமையை ஏற்றுக் கொள்பவர்களாக பெரும்பான்மையினர் காணப்படுவதில்லை. இதற்குத் தாம் இயலாமையுடைய பிள்ளையின் பெற்றோர் என்ற தாழ்வுச் சிக்கல், பாவிகள் என்ற தாழ் மனநிலை, சமயநெறிகள் போதித்த கருமக் கோட்பாடு, வெட்கம், வறுமை முதலான பல காரணிகள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

ஆனால் ஆசிரியர் ஒருவர் விசேட தேவையுடைய மாணவருக்கு கற்பிப்பதற்கு பெற்றோரது பங்களிப்பு மிக அவசியமானது. ஏனெனில் அம்மாணவரின் பெற்றோரே தம் பிள்ளையைப் பற்றி அவரது இயலுமைகள், இயலாமைகள் பற்றி நன்கு தெரிந்தவர்கள் ஆவார்கள். அத்துடன் குறித்த மாணவனது பாடசாலைக் காலம் முழுவதும் அவரை நன்கு விளங்கி வருபவர்கள். ஆனால் குறித்த வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியருக்கு அம் மாணவரை சரியாக விளங்கிக்கொள்வதற்கு போதிய கால அவகாசம் கிடைத்திருக்காது. எனவே குறித்த மாணவரது பெற்றோர் அவ்வாசிரியரை நாடி தம் பிள்ளை பற்றிய கலந்துரையாடலில் ஈடுபட்டு அவரது கற்றல் செயன்முறைக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தமது விசேட தேவையுடைய பிள்ளையையும் அவரது கற்றல் நடவடிக்கையையும் தொடர்ச்சியாக அவதானித்து வருவதால் எந்த கற்பித்தல் உபாயங்கள், கற்றல் முறைகள் அவரைக் கவரும் என்பதையும் அவரது கற்றலுக்கான அகவூக்கலை எது வழங்கும் என்ற விடயம் ஆசிரியரிலும் பார்க்க பெற்றோர் அறிந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். எனவே பெற்றோர் குறித்த விசேட தேவையுடைய மாணவரது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் செயன்முறையில் ஆசிரியரோடு இடைவினை கொள்வது மிகவும் அத்தியாவசியமானது.

பெற்றோரும் ஆசிரியரும் தொடர்ச்சியான இடைவினை உறவைப் பேணுவதன் மூலம் விசேட தேவையுடைய மாணவரது நடத்தையினையும் மனப்பாங்கையும் தொடர்ந்து அவதானிக்கவும் சீராக்கம் செய்யவும் இலகுவாக முடிவதுடன் மாணவரது நடத்தையும், மனப்பாங்கும் விரைவில் கற்றலுக்கு உகந்ததாக அமைவதுடன் அவர் இலகுவில் சமூகத்திறன்களையும் பெறக்கூடியதாக அமையும்.

விசேட தேவையுடைய மாணவரது பெற்றோர் தமது பிள்ளையின் நடத்தைகளை சீராக்கம் செய்யவும், ஆசிரியர் வேண்டிய மீள்வலியுறுத்தலை மேற்கொள்ளவும், தமது பிள்ளை கற்கும் பாடசாலையின் கலாசாரம், பணியிலக்குகளை விளங்கிக்கொள்ளவும் இலகுவாக அமைகின்றது.

விசேட தேவையுடைய மாணவரது பெற்றோர் ஆசிரியரது இடைவினையானது, இவ்விரு பகுதியினரது பொறுப்புணர்வை அதிகரிப்பதோடு குறித்த மாணவர் தனது கல்வி பற்றிய நேர்மனப்பாங்கை விருத்தி செய்வதாகவும் அமையும்.

விசேட தேவையுடைய பிள்ளையின் விருத்திச் செயன்முறைகள் பெற்றோரும் சில அறிமுறைகளையும், திறன்களையும் அறிந்துகொள்ள வேண்டிய தேவையுள்ளது. குறிப்பாக பிள்ளையினது நடத்தைச்சீராக்கம், கருவி இயைபாக்கம், உடல் விருத்தி, நோய் முதலானவை பற்றிக் குறிப்பிடலாம். இவ்வாறான விருத்திக்கான செயன்முறைகளை அறியும்போது குறித்த பிள்ளையினது இயலாமை விரைவில் குணமாக்கப்படலாம்.

விசேட தேவையுடைய பிள்ளையின் பெற்றோரது இடைவினை ஐந்து மட்டங்களிலே மிகவும் இன்றியமையாததாக வேண்டப்படுகிறது.

**1. முதலாம் மட்டம் தகவல் பரிமாற்றம்**

இம்மட்டத்திலே பாடசாலை தனது நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய தகவலை வழங்கும் அதேவேளை பெற்றோர் தமது பிள்ளை தொடர்பாக அனைத்து தகவல்களையும் வழங்குதல் வேண்டும். இதன்பின் குறித்த பிள்ளைக்கான கல்வித்திட்டம் இனங்காணப்படும்.

**2. இரண்டாம் மட்டம்**

இம்மட்டத்தில் பாடசாலையின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் செயற்பாடுகளிலும் பெற்றோர் ஈடுபட்டு தமது பிள்ளைக்கு கற்றல் தொடர்பாக தேவையானவற்றை இனங்காண்பர்.

**3. மூன்றாம் மட்டம்**

பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து பிள்ளையின் கற்றல் இலக்குகளையும் அவற்றைக் கற்பதற்கான கால அளவையும் நிர்ணயிப்பர்.

**4. நான்காம் மட்டம்**

இம்மட்டத்திலே பிள்ளையின் தனியாள் கல்வித் திட்டத்தையும் *(Individual Educatiopn Plan)* தனியாள் நிலைமாற்றுத் திட்டத்தையும் *(Individual Trans fer Plan)* பாடசாலை, பெற்றோர் மற்றும் துறைசார்ந்த நிபுணர்கள் இணைந்து வரைந்து கொள்வர்

**5. ஐந்தாம் மட்டம்**

இம்மட்டத்திலே பெற்றோர் பாடசாலையுடன் இணைந்து முழுமையாக செயற்படுதலைக் குறிக்கும். இச்செயற்பாட்டுக் காலத்தின் போது பாடசாலைக்கும், பெற்றோருக்கும் இடையில் நாளாந்தக் குறிப்பு அட்டை, குறிப்பு புத்தகம், மீள்நோக்கு ஏடு முதலான ஆவணங்களும் பயன்படுத்தப்படலாம். இதனைவிட வரன்முறையாக பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு நிகழ்வதுடன் பிள்ளை பற்றிய நேர் மனப்பாங்குடன் இவர்களை வழிநடாத்துவது பாடசாலை அதிபரது பொறுப்பாகும்.

மேலும் விசேட தேவையுடைய மாணவனை முகாமை செய்து கையாள்வதிலே அவனது குடும்பத்தினர் மட்டுப்பாடுகளை வெளிக்காட்டுவார்களாயின் அக்குடும்ப உறுப்பினர்களை வலுவூட்டுவது மிகவும் இன்றியமையாதது. இந்த வகையிலே சில பயிற்சிகளை ஒழுங்கு செய்து பெற்றோரைப் பங்கேற்க வைப்பதும் அதிபரது கடமையாகும். *Parent Management Training behavioural parent training positive parental practices* என்பன இவ்வகைப் பயிற்சியில் குறிப்பிடத்தக்கன.

விசேட தேவையுடைய மாணவர்களது கற்றல் பெற்றோரது பங்கேற்றலை சுருக்கமாக நோக்குவோமாயின்.


- குறித்த மாணவரை இனங்கண்டு மதிப்பீடு செய்து கல்வி நிகழ்ச்சித்திட்டத்திலே பொருந்துவதற்கு முன்பு அவை தொடர்பில் பெற்றோர் தமது பங்களிப்பை வழங்குதல் வேண்டும்.
- குறித்த மாணவரது தனியாள் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திலே பெற்றோர் தமது வலுவான பங்களிப்பை நல்கி குறித்த மாணவரது ஆரம்ப நிலையை இனங் கண்டு பொருந்தச் செய்வது.
- குறித்த மாணவருக்கு பொருத்தமான கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகளை பாடசாலை இனங்காண உதவுவது அல்லது மாணவருக்குத் தேவையான தனித்துவமான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்துவது.
- பாடசாலையினது செயற்பாடுகளை மீளநோக்கி தொடர்ந்தும் தமது பிள்ளைக்குப் பொருத்தமான முறையில்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை மீளவடிவமைப்பது.
- குறித்த மாணவரது தனியாள் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை தேவைகள் இயலாமைகள் மற்றும் விருத்தித் திட்டங்கள் பற்றிய அறிக்கைகளைப் பேணுவது இரகசியம் காப்பது என்பனவும் பெற்றோரது கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1931 தொடக்கம் 1947 வரை இந்த நாட்டின் அரசியல் அமைப்பு சபையின் நிறைவேற்றுக்குழுத் தலைவராகவும், கல்வி அமைச்சராகவும் அரும் பணிபுரிந்த கிறிஸ்தோபர் வில்லியம் விஜேகோண் கன்னங்கரா அவர்களே இலவசக் கல்வியை இந்த மண்ணுக்கு அறிமுகம் செய்தார்கள். எமது நாட்டின் பரம ஏழைகளும் அறிவுச் சமூக அங்கத்தவர்களாக மாறவும், உயர் குழாத்துக்கு மட்டுமே முடியுமாக இருந்த கல்வியானது ஏழைகளுக்குள்ளும் ஊடுகடத்தப்பட அது வழிவகுத்தது. 1945 ஒக்டோபர் மாதம் இலவசக் கல்வி அமுல்படுத்தப்படும் வரை எமது கல்வித்துறையில் மூன்றுவிதமான கட்டண முறைகள்

சுவீகரிக்கப்பட்டு பூரண இலவசக்கல்வி நாட்டில் நிலைநாட்டப்பட்டது. காலப்போக்கில் நிலை மாறத் தொடங்கியது. அரசபாடசாலைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற அவற்றுக்கு அருகில் தலைசிறந்த தனியார் போதனை நிலையம் ஒன்று வேண்டும் என்ற நிலை மாறி வருகிறது. பாடசாலைக் கல்வி முற்றாக இலவசமாக வழங்கப்பட்டாலும் தனியார் போதனை என்ற விசம் கலந்ததாகவே அது சமூகத்திற்குள் நகர்கிறது.

1940களிலேயே எமது நாட்டில் தனியார் போதனை முறை அறிமுகமாகிவிட்டதாக பேராசிரியர் *A.V.* சுரவீர அவர்கள் தெரிவித்துள்ளார்கள். பிள்ளைகளின்



ஏ.எல்.நௌபீர்

# இலங்கைக் கல்வி முறைமை :
# புறந்தள்ள முடியாத தனியார் போதனைத் தொழில்

நடைமுறையிலிருந்தன. 25ரூபா பணம் படைத்த பிள்ளைகளுக்கான மேல்த்தட்டுப் பள்ளிகளுக்கும், 15 ரூபா இரண்டாம் நிலை வகுப்பு பள்ளிகளுக்கும், 10 ரூபா அடிமட்ட வகுப்பு பள்ளிகளுக்கும் அறவிடப்பட்டது. இவ்வாறு பல பொருளாதாரப் படித்தரங்களிலும் பள்ளிகள் நடைபெற்றன. அதேகாலத்தில் தங்கப் பவுண் ஒன்றுக்கு 5/-வும், ஆசிரியரின் மாதச் சம்பளம் 10/-வாகவும் இருந்தது.

இலவசக் கல்வி முறைமை நாட்டில் அறிமுகமானதுடன் அரச பாடசாலைகளில் கட்டணம் அறவிடும் முறை நிறுத்தப்பட்டதுடன், தனியாருக்குச் சொந்தமானதும், மிசனறிப் பாடசாலைகளில் சிலதும் அரசால்

பாடசாலைக் கல்வியில் அக்கறையுடைய பெற்றோர் அவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில் பாடசாலை விட்ட நேரங்களிலும் ஆசிரியர்களை நாடியதால் தான் தனியார் போதனை முறைமை எமது கல்விக்குள் புகுந்துகொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கன்னங்கரா ஞாபகார்த்த உரை *NIE*, 2011).

உலகின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும், உலகமயமாதல், நவீனமயமாதல் போன்றவையும் கூட நமது கல்வியில் தனியார் போதனையை அதிகரித்தன. 5 ஆம் தரபுலமைப் பரிசில் முறைமை வழங்கிய உயர் பாடசாலைகள் நோக்கிய அனுமதிகள், க.பொ.த (உ/த)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் பெறும் வெற்றியும் மிகக் குறைந்த மாணவர் களுக்கான பல்கலைக்கழக வாய்ப்பும், கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டு வரும் பொருளா தார நெருக்கீடுகளும் என சமூகத்தில் தனியார் போதனையை ஊக்கப்படுத்தி வருகின்றன.

அரசின் தவிர்க்க முடியாத பரீட்சை மையக் கல்வி யும் தனியார் போதனையை அதிகரித்தே வந்துள்ளன. ஒரு மாணவர் இழக்கும் ஒரு புள்ளியால் அவர் மருத்துவ பீடத்தை இழந்து விடுவதும், அவன் பெறும் ஒரு மேலதிகப் புள்ளியால் அவரின் முழு எதிர்காலமுமே வெளிச்சமாவ தும் என எமது பரீட்சை முறை காணப்படுகின்றது. ஏழைக் குடும்பத்திலுள்ள ஒரு தாயோ, தந்தையோ தனது பிள்ளை படித்து இந்த சமூகத்தில் ஒரு வைத்தியராக அல்லது ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்றே விரும்புகின் றார்கள். வேறு மூலதன வழிகளற்ற அக்குடும்பத்தின் பொருளாதார நிலைமையையும் மேம்படுத்த இக்கல்வி முறைமையை அவர்கள் நாடுவதில் தவறிருக்காது. அவர்களின் இந்தவித உந்துவிசையால் தனியார் போத னைத் தொழில்கள் *(Tuition Industries)* அபரிமிதமாக வளர்ச்சியடைவதுதான் யாராலுமே தடுக்க முடியாததாக வுள்ளது.

இன்று இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பங்களாதேசம் ஆகிய ஆசிய நாடுகளிலும் தனியார் போதனைத் தொழில்கள் அபார வளர்ச்சி கண்டு வருகின்றன. 1980 களிலிருந்தே தனியார் போதனைத் தொழில்கள் பற்றியும், அவற்றின் தாக்கம் பற்றியும் எமது பல்கலைக்கழகங்கள், கல்வித்துறை மையங்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தவிர்க்க முடியாமல் மாணவர்களின், பெற்றார்களின் தனியார் போதனை நிலையங்கள் நோக்கிய நகர்வும், உந்துதலும் அதிகரித்துக் கொண்டு வருவதாகவே ஆய்வு கள் கூறுகின்றன.

கலாநிதி கன்னங்கரா அவர்களால் உருவாக்கப் பட்ட இலவசக் கல்வியின் குரல்வளையை நசுக்கிக் கொண்டு விசுவரூபமெடுத்து வரும் இத்தனியார் போத னைத் தொழில் முறைமை பலதிறத்தாராலும் விமரிசனத் துக்குட்பட்டு வருகின்றன. இன்று தொழில் வசதியாக நல்ல முதலீடுகளிருந்தால் தனியார் போதனைத் தொழில் களையும் மக்கள் அமைத்து வருகிறார்கள். அந்த அளவிற் குத் தனியார் போதனைத் தொழில்கள் இன்று பெரும் வளர்ச்சிகண்டு வருகின்றன. நகரங்களில் மட்டுமன்றி கிராமப்புறத்திலும் தனியார் போதனைகள் கல்வியில் பாரிய தாக்கத்தைச் செலுத்தி வருகின்றன. ஜனரஞ்சக மான, திறமை வாய்ந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்க வேண்டுமானால் மாணவர்கள் தனியார் போதனைக ளைத்தான் நாட வேண்டியுள்ளது.

எமக்கு மருத்துவர்களையும், பொறியியலாளர்களை யும் இலங்கைப் பாடசாலைகள் தருவதாக நாம் பிழை யாகவே சொல்லிக் கொண்டிருக்கிறோமா என்று எண்ணத் தோன்றுகிறது. தரம் 5ல் உச்ச புள்ளி பெற்ற மாணவன், சா/தரத்தில், உயர்தரத்தில் அதிசிறந்த எல்லா மாணவர்களுமே மிதமிஞ்சிய தனியார் போதனைக்குள் ஆட்பட்டவர்கள் என்பதுதான் உண்மை. ஆனால் ஊடகங் களால் கூட இந்த உண்மை மறைக்கப்படுகின்றன.

## தனியார் போதனை வகுப்புக்களின் வகைகள்

இன்று பல வகையான தனியார் போதனை நிலையங்கள் நடாத்தப்படுகின்றன. அதிகமான பதிவு களற்ற தொழில்களும் கண்டறியப்பட்டுள்ளன. சில வியாபாரப் பெயர் பதிவாளர் சட்டத்தின் கீழும், வேறு சில கல்வி அமச்சின் கீழும், சில சமூக சேவை அமைச்சின் கீழும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருவதாக அறிய முடிகிறது. அதிகமான நடமாடும் தொழில்களாகவும் காணப்படுகின்றன. அவற்றின் தன்மைக்கும் அளவுக்கு ஏற்ப நான்கு வகையாகப் பிரித்து நோக்கலாம்.

### 01. தனிப்பட்ட வகுப்புக்கள்

இதில் மாணவர்களின் வீட்டுக்கு ஆசிரியர் சென்று வகுப்புக்களை நடாத்துவார். வகுப்புக்கள் பற்றிய விளம்பரங்களைப் பத்திரிகையில், மற்றும் துண்டுப் பிரசுரம் மூலம் மேற்கொள்வார். சில சமயம் குறித்த மாணவரின் வீட்டுக்கு அடுத்த அயல் வீட்டு மாணவர் களும் வந்து கலந்துகொள்வதும் இங்கு காணப்படுகின் றது. இவ்வகைப் போதனைமுறை அதிகமாகப் பணக்கார வீடுகளிலேயே நடைபெறும். சில பெற்றோர் ஆசிரியர் களுக்கு வாகன வசதிசெய்து கொடுப்பதும் உண்டு. இதில் உரிய துறையில் கற்பிக்கும் ஆசிரியர்களும், கற்றுக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களும், போலியான சிலரும் தங்கள் கல்வி வியாபாரத்தை மேம் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் பொய்யான பெயர்களிலேயே இத்தொழி லைச் செய்துவருகிறார்கள். பல்கலைக்கழகங்கள் அறியுமிடத்து அவர்களின் பட்டப்படிப்புப் பாதிக்கப் படலாம். தலைசிறந்த தனியார் போதனை ஆசிரியர்கள் இன்னும் தங்களின் பல்கலைக்கழகப் பட்டங்களை முடிக்காமலிருப்பதும் தெரியப்பட்டுள்ளது.

### 02. குழு வகுப்புக்கள்

ஒரே வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் குழுக்களாக ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து ஆசிரியரை வரவழைத்து அல்லது ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று கற்பதே இம் முறையாகும். இதிலும் சாதாரண தனியார் போதனைக் கட்டணத்திலும் பார்க்கக் கூடுதலாக அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தனிப்பட்ட கட்டணத்திலும் குறைவாக இருக்கும். இவ்வகை வகுப்புக்களும் நகரப்பகுதிகளிலேயே நடைபெற்று வருகின்றன.

**03. பரந்த அளவில் நடைபெறும் தனியார் வகுப்புக்கள்**

இதுவே சாதாரணமாக நடைபெறும் தனியார் போதனை முறையாகும். அதிகமான மாணவர்கள் ஒரு இடத்திற்கு வரவழைக்கப்பட்டு பரந்த முறையில் இவ்வகை வகுப்புக்கள் நடைபெறும். இதற்கென்று பிராந்திய ரீதியில் புகழ்பெற்ற நிலையங்கள் இயங்கி வருகின்றன. பிரத்தியேகமான அட்டைமுறை மூலம் கட்டணம் அறவிடல், மாணவர் வரவைக் கணிப்பிடல், குறித்த நேரத்திற்கான கட்டணத்தை அவ்விடத்திலேயே அறவிடல் என்பன அதற்கென நியமனம் பெற்ற உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு விரிவுரை முறையில் கற்பித்தல் நடைபெறும். வகைதொகையான மாணவர்கள் திரை அரங்குகளிற்குள் நுளைவதுபோல் நுளைந்து எவ்வாறு கற்க முடிகிறது என்பது புதுமையாக இருக்கிறது.

இங்கு பிளற்றோ, டூயி, அரிஸ்ரோட்டில் எவரினதும் கொள்கைகள் பின்பற்றப்படுவதோ, மதிக்கப்படுவதோ இல்லை. ஆனால் பாடசாலை முறைமையை விடவும் அபாரமாக இத்தனியார் போதனைகள் வளர்ச்சியடைவதுதான் புதுமையாகவுள்ளது. இத்துறையில் பணியாற்றும் ஆசிரியர்கள் கூட அறிவைச் சந்தைப்படுத்தும் எல்லாவகையான தந்திரோபாயங்களையும் கொண்டிருப்பது மிகவும் அவதானத்துக்குரிய விடயமாகும். சில சமயம் ஒலிபெருக்கிகளும் பாவிக்கப்படுகின்றன. பொதுமக்களுக்கான விரிவுரை முறையில் மாணவர்களுக்குப் போதனைகள் நடைபெறுகின்றன. அளவுக்கதிகமான ஆண், பெண் மாணவர்கள் ஒன்று கூடுவதால் சமூகச் சீர்கேடுகளும், துஷ்பிரயோகங்கள் பல நடைபெறுவதாக வும் பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர், பெண்கள் பிரிவு தெரிவிக்கின்றன.

**04. நவீன வசதிகளுடன் பரந்தளவில் நடைபெறும் தனியார் போதனைத் தொழில்கள்.**

இவை பரந்தளவில் நடைபெறும் தனியார் போதனைமுறை போன்றதானாலும், தேசிய ரீதியில் புகழ்பெற்ற ஆசிரியர்களால் பல நூறு மாணவர்களை ஓரிடத்திற்கு வரவழைத்து நடைபெறுகிறது. முழுப் பாடத்திட்டத்தினதும் எல்லா அலகுகளும் ஒரே நாளில் செய்து முடிக்கும் அதிசயச் செயற்பாடுகளும் இவர்களால் நடைபெறுகின்றன. இங்கு ஒலிபெருக்கி, பல்லூடகம், என்பனவும் பாவிக்கப்படுகின்றன. மாணவர்களால் ஆசிரியர்களைக் கண்டுகொள்ளவும் முடிவதில்லை. காரணம் பல தட்டுக்களில் *(Flats)* மாணவர்களும் ஆசிரியர் ஒரு தட்டிலும் என விரிவுரை வடிவமைக்கப் பட்டிருக்கும். விரிவுரை முடிந்ததும் ஆசிரியர் பெருந் தொகைப் பணத்தைப் பெறுவார்.

இதிலீடுபடும் **ஆசிரியத் தொழிலதிபர்கள்** விமானம் மூலம் வந்திறங்குவதும், இவர்களுக்கும் பரீட்சை வினாத்தாள் தயாரிப்பவர்களுக்கும் இடையில் ஏதோ தொடர்பிருப்பதாகவும், இவர்களால் ஊகம் தெரிவிக்கப் படும் வினாக்கள் பொதுப் பரீட்சைகளில் வருவதாகவும், மாணவர்களும், பெற்றோரும் நம்புகிறார்கள். இவர்கள் பாடசாலைகளிலும் பார்க்கச் சிறப்பாக தனியார் போதனை நிலையங்களில் கற்பிப்பதாக எண்ணும் மாணவர்கள் வாரிஇறைக்கும் கட்டணங்கள் பற்றி மட்டுமே கரிசனை கொள்ளும் இவ்வகை ஆசிரியர்களால் அதற்குப் பின்னாலுள்ள பொருளாதார நிலைமைகள், வறுமை பற்றியெல்லாம் அவர்களால் கண்டுகொள்ள முடிவதில்லை.

இங்கு சில நல்ல ஆசிரியர்கள் ஏழை மாணவர்களுக்கு கட்டணமின்றியும் கற்பிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. முழு இலங்கையிலும் இன்று க.பொ.த சா/தரத்தில் 92.24%, உயர்தரத்தில் 98% தனியார் போதனைகளுக்குப் போகும் மாணவர்களாகவே இருப்பதாக தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை கூறுகின்றது.

*(2010)மாணவர்களின் தனியார் போதனை வகுப்புகளுக்கான வருகை வீதங்கள் (பாட அடிப்படையில் -2010)*

*அட்டவணை 01*

| க பொ த சா/த | | க பொ த உ/த | |
|---|---|---|---|
| பாடம் | வீதாசாரம் | பாடம் | வீதாசாரம் |
| கணிதம் | 91% | கணிதம் | 79% |
| விஞ்ஞானம் | 73% | இரசாயனவியல் | 99% |
| ஆங்கிலம் | 68% | பௌதீகவியல் | 99% |
| சிங்களம் | 18% | உயிரியல் | 100% |
| வரலாறு | 13% | பொருளியல் | 98% |
| அழகியற் கல்வி | 11% | சிங்களம் | 77% |
| | | வணிகக் கல்வி | 95% |
| | | கணக்கியல் | 99% |

**மூலம்: தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை 1991**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் மாணவர்கள் தனியார் போதனை வகுப்புக் களுக்கு வருகிறார்கள் என்பதை ஆய்வு செய்யுமுகமாக இலங்கையில் 2378 மாணவர்களை தரம் 10லிருந்து தெரிந்தெடுத்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவை பின்வருமாறு தேசிய கல்வி ஆணைக் குழு வெளியிட்டுள்ளது.(2010)

[1] பொதுப் பரீட்சைகளின் வினா விடைகளைப் பற்றிக் கலந்துரையாடச் செல்வதாக 68%

[2] போதுமான பயிற்சிகள் பாடசாலையில் வழங்கப்படுவதில்லை என்று 53%

[3] முழுப்பாடத்தின் எல்லா அலகுகளும் பாடசாலையில் முடிக்கப்படுவதில்லை என்று 53%

[4] பாடசாலையில் கற்பிப்பதை விளங்க முடிவதில்லை என்று 50%

[5] எவ்வாறு வினாக்களுக்கு விடையளிப்பதென தனியார் போதனையில் விளக்குவதாக 29%

[6] புறக்கிருத்திச் செயற்பாடுகளால் விடுபட்டுப் போன பாடங்களை முடிப்பதற்காக என்று 23%

[7] பெற்றோரின் உந்துதலால் தனியார் போதனைக்கு வருதாக 10%

[8] சந்தோசமாகப் பொழுதைப் போக்க 7%

[9] வகுப்பாசிரியரால் வகுப்புக்குள் சமூகமளிக்க தடை செய்யப்பட்டுள்ளதால் 6%

[10] சக மாணவர்கள் தனியார் வகுப்புக்களுக்கு வருவதால் 3%

தரம் 12 க.பொ.த உ/த மாணவர்கள் 868 பேரைத் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் மேலுள்ள மாணவர்களால் தெரிவிக்கப்பட்டதை ஒத்ததாக இருந்தாலும் உ/த மாணவர்களால் புதிய சில கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

[1] பலத்த போட்டியை வெற்றிகொள்ளவும், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு பெறவுமே தனியார் போதனைகளுக்கு வருவதாகவும்.

[2] சில ஆசிரியர்கள் பாடசாலையில் அர்ப்பணத்துடன் கற்பிப்பதில்லை, மாணவர் நலனிலும் அக்கறை செலுத்துவதில்லை.

[3] உரிய பாடத்திற்கு ஆசிரியர் பாடசாலையில் இல்லை.

[4] வகுப்பாசிரியரின் தொடரான லீவு *(long absents)*

போன்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. க.பொ.த உ/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடம் தனியார் போதனைகளால் என்ன பயனைப் பெற்றீர்கள் என்று வினவியதும் அவர்களில் 76% மானவர்கள் தங்களுக்கு பொதுப் பரீட்சையில் வினாக்களுக்குச் சிறந்த முறையில் விடையளிக்க தனியார் போதனைகள் உதவியதாகச் சொன்னார்கள் (தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை 2010)

பாடசாலைகளில் தரம் 12, 13 மாணவர்களின் வரவிலும் பாடசாலை ஆரம்பிக்கும் முதலாம் தவணையிலும் அடுத்த தவணைகளுக்கான வரவில் பலவீனத்தையே காணமுடிகிறது. மூன்றாம் தவணையில் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. (பார்க்க அட்டவணை-02)அதிகமான மாணவர்கள் பிந்திய தவணைகளில் பாடசாலைக்கு வருவதில்லை. ஆசிரியர்கள் பாடசாலைக்கு வந்து சும்மா இருந்துவிட்டு வேதனம் பெறுகிறார்கள். மாணவர்கள் வரவின்மையால் இங்கு வளம் வீண் விரயமாகும். மாணவர்களிடம் அவர்களின் மந்தமான வரவு பற்றி வினவியதும் அவர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு.

[1] மீட்டல் தனியார் வகுப்புக்களுக்குச் செல்லல்

[2] வீட்டிலிருந்து படிப்பது

[3] பிந்திய தவணைகளில் பாடசாலையில் கற்பிக்கப்படுவதில்லை.

[4] 80% மான வரவு பூர்த்தியாகிவிட்டதால்

[5] சக மாணவர்களும் பாடசாலைக்கு வருவதில்லை.

**அட்டவணை-02**

**பாடசாலைக்கான மாணவர் வரவு நிலைமை (க.பொ.த உ/த)**

| தரம் | தவணை | வரவு |
|---|---|---|
| தரம் 12 | தவணை 01 | 100% |
| | தவணை 02 | 99% |
| | தவணை 03 | 99% |
| தரம் 13 | தவணை 01 | 96% |
| | தவணை 02 | 72% |
| | தவணை 03 | 40% |

**மூலம்: தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை 1991**

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள், பாடசாலைக்கு வெளியே தனியார் போதனைத் தொழிலில் முழுமையாக ஈடுபடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், பல்வேறு வகைப்பட்ட ஏனைய ஆசிரியர் கள் எனப் பலரிடமும் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் குறிப்பிட்ட தனியார் போதனைத் தொழில் புரியும் ஆசிரியர்கள் இளம் மாணவ, மாணவியர் மத்தியில் பல வழிகளிலும் ஜனரஞ்சகமும், புகழும் பெற்றிருப்பதாகவும், இரட்டை அர்த்த வசனங்களை கட்டிளமைப் பருவத் தினர் மத்தியில் பேசுவதாகவும் அது தொடர்ந்தும் மாணவர்களை தனியார் போதனை நோக்கிக் கவர்ந்து வருவதாகவும் NECயின் ஆய்வொன்று கூறுகிறது. அத்துடன் பாடசாலையில் க.பொ.த சா/த, உ/த வகுப்புக் களில் குறித்த பாடத்தைக் கற்பிக்கின்ற 50% மான ஆசிரியர்களால் தனியார் போதனை வகுப்புக்கள் நடாத்தப்படுவதாகவும் கூறுகிறது.

ஆசிரியர்கள் ஏன் தனியார் போதனைகளைச் செய்ய முற்படுகிறார்கள் எனின் பொருளாதாரச் சுமை காரணமாக மேலதிக வருமானத்தை உழைப்பதற்கே என்று கூறுகிறார்கள். மாணவர்களும், பெற்றோரும் இந்த ஆசிரியர்கள் சிறந்த முறையில் தனியார் போதனை வகுப்புக்களில் கற்பிப்பதாகவும், தங்களுக்கு புதிய விடயங்களைத் தனியார் போனைகளில்தான் பெற முடியும் என்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.

**தனியார் போதனைத் தொழில்களின் விளைவுகள்**

நீண்ட காலமாக எமது நாட்டில் இலவசக்கல்வி நடைமுறையிலிருந்தாலும் கல்விக்கான செலவில் கணிசமான பங்கைப் பெற்றோரும் ஏற்று வருகிறார்கள். 2002ஆம் ஆண்டில் மாணவர் கல்விக்கான செலவில் 21 சதவீதம் பெற்றோர்களால் வழங்கப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவர்கள் தமது பிள்ளைகள் பெறுகின்ற தனியார் போதனைக்காக தமது கல்வி நிதியின் 45 சதவீதத்தைச் செலவிடுகிறார்கள். பொதுப்பரீட்சைகளில் காணப்படும் பலத்த போட்டி காரணமாகவே பெற்றோர் பிள்ளைகளைத் தனியார் போதனை நோக்கித் தள்ளி வருகிறார்கள். 2007 ஆம் ஆண்டில் குடும்பங்கள் அல்லது பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக 936 கோடி ரூபாய்களைச் செலவிட்டனர். இத்தொகை அரசாங்கத்தின் கல்விக்கான செலவின் 17 சதவீதம் என மதிப்பிடப்பட் டுள்ளது. அச்செலவு பெரும்பாலும் தனியார் போதனை, போக்குவரத்துச் செலவுக்கே ஏற்படுவதாக அறியப்பட் டுள்ளது. பெற்றோரின் கல்விச் செலவில் 33% தனியார் போதனைகளுக்கே செலவிடப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தனியார் போதனையின் முக்கிய அம்சம் விசேடமாக மாணவர்களைப் பரீட்சைக்கெனத் தயார் செய்வதாகும். இங்கு வேறு எந்தக் கல்வி நோக்கங்களும் கருத்திற்கொள் ளப்படுவதில்லை. பாடசாலைகள் பல்வேறு சமூக கலாசார இலக்குகளுடன் செயற்படுபவை. விளையாட்டுப் போட்டிகள், சமய விழாக்கள் பல்வகைப்பட்ட மாணவர் சங்கச் செயற்பாடுகள் என்பன உண்டு. பெற்றோர்கள் பாடசாலையின் பரந்த செயற்பாடுகளிலும் பிள்ளை களின் பரீட்சைச் சான்றிதழ்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பாடசாலைகளின் கற்பித்தலில் திருப்தி காணாத பெற்றோர் தனியார் போதனைகளுக் காகச் செலவு செய்யத் தயாராகவே இருக்கின்றார்கள். தனியார் போதனைகளால் மாணவர் மதிப்பெண்கள் அதிகரிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கினறன. (சந்திரசேகரன்.சோ, 2012)

**தனியார் போதனைக் கட்டணங்களும் ஏழைப் பெற்றோரும்**

தனியார் போதனையின் மிக முக்கிய விடயம் அது கொண்டு வரும் பொருளாதாரச் சுமையாகும். பாடங்க ளுக்கான கட்டணம் பல்வேறு அடிப்படையில் அமைகின்றன. பாடத்தின் தன்மை, பாடத்திற்கான ஆசிரியரின் கிடைப்பனவு, மாணவர் தரம், ஆசிரியரின் பிரபல்யம், ஆசிரியரின் அமைவிடம், ஆசிரியர் கொழும்பு போன்ற பிரதேசமெனின் அவர் தூரப்பிரதேசங்களுக்கு போக்குவரத்துச் செய்ய கட்டணமும் அதிகரிக்கின்றன. பெற்றோர் 2ஆம் தரத்திலிருந்தே பிள்ளைகளைத் தனியார் வகுப்புக்களுக்கு அனுப்புகின்றனர். 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையைக் கருத்திற்கொண்டே இவ்வாறு மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர். சாதாரணமாக க.பொ.த சா/த, வகுப்புக்களுக்கான கட்டணம் தனிப்பட்ட வகுப்புக்களில் வெறும் இரண்டு மணித்தியாலத்திற்கு 1500/-வாகவும், பரந்தளவான தெனின் பாடத்திற்கேற்ப 200/-, 300/- வாகவும் அறவிடப்படுகிறது.

அதேபோல் க.பொ.த உ/த வகுப்புக்களிற்கான கட்டணம் தனிப்பட்ட வகுப்புக்களுக்காக வெறும் இரண்டு மணித்தியாலத்திற்காக 3000/-வாகவும், பரந்தளவான வகுப்புக்களுக்கான கட்டணம் 500/-, 700/ - வாகவுமிருக்கின்றது.

*'In Sri Lanka the private tuition industry was flourishing to such an extent that it had become a shadow of the regular school system. A large number of students and parents perceived extra-school tutoring as a crucial determinant of academic success." (Ariyadasa de silva, 1991)*

மேலுள்ள கூற்று கடந்த 1991 ல் மேற்கொள்ளப் பட்ட ஆய்வின் பின்னர் தெரிவிக்கப்பட்டதாகும். NEC யின் ஆய்வின்படி நாட்டின் உ/த கற்கும் மாணவர்களில் 98% மானவர்கள் தனியார் போதனைகளுக்கு வருவதாகவும், அவர்களில் 76.2%வர்கள் தங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிப் பரீட்சையில் சிறந்த முறையில் முகம்கொடுப்பதற்குத் தனியார் போதனைகள் உதவியதாகச் சொல்கிறார்கள். இது உண்மையில் ஒரு மாயையா? அல்லது இன்றைய காலத்தில் எமது நாட்டிலுள்ள 9685 அரச பாடசாலைகளும் செய்யாத பணியைத் தனியார் போதனைகள் செய்கின்றனவா என்பது மிகப்பெரிய வினாவாகும்.

*அட்டவணை-03*

***மாணவர்களால் தனியார் போதனைக்காகச் செலுத்தப்படும் சாரசரி மாதக் கட்டணங்கள்***

| பாடம் | சா/த ரூபா | உ/த ரூபா |
|---|---|---|
| கணிதம் | 300 | 750 |
| விஞ்ஞானம் | 275 | |
| பௌதீகவியல் | | 800 |
| இரசாயனவியல் | | 750 |
| உயிரியல் | | 700 |
| ஆங்கிலம் | 330 | |
| வணிகக் கல்வி/கணக்கீடு | 285 | 450 |
| சிங்களம் /தமிழ் | 250 | 450 |
| அழகியற் கல்விப்பாடங்கள் | 475 | |
| வரலாறு | 325 | |
| தகவல் தொழிநுட்பம் | 465 | |
| ஆங்கில இலக்கியம் | 500 | |


மூலம்: தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை 1991

இவை நாடளாவிய ரீதியில் பெறப்பட்ட சராசரிகளாகும். இவற்றைவிட கட்டணங்கள் பிராந்திய ரீதியில் மாற்றமடையலாம். குறித்த மாணவர்களால் எல்லாப் பாடங்களுக்கும் தனியார் வகுப்புக்களுக்குச் சமூகமளிப்பதில்லை என்பதையும் கவனத்திற் கொள்க.

**தனியார் போதனை முறைமையும் சமூகச் சீர்கேடும்**

தனியார் போதனைகள் பற்றிப் பேசும்போது அது கொண்டு வந்த சமூக, கலாசாரச் சீரழிவுகள் பற்றியும் கவனஞ் செலுத்த வேண்டியதும் முக்கியமாகும். மாணவர், ஆசிரியர்களின் பல துர்நடத்தைச் சம்பவங்கள் நாடு தழுவிய ரீதியில் தனியார் போதனை தொடர்பாகப் பதிவாகியுள்ளன. அத்துடன் தனியார் போதனைகளுக்குப் பல பகுதியிலுமிருந்து மாணவர்கள் சமுகமளிப்பதால் சாதிபார்க்காதத் திருமணங்களும், பரஸ்பர நல்லுறவும் ஏற்பட்டுமிருக்கின்றன.

மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், தனியார் போதனைத் தொழில்கள் என்பவற்றினூடாகத் தகவல்களைப் பெறுவது கடினமாகும். பொலிஸ்



நிலையங்களுக்கு வந்த முறைப்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது சில முடிவுகளை எடுக்க முடிகிறது. பெரும்பாலான தவறுகளை ஊடகங்களும் சுட்டிக்காட்டி வருகின்றன. இவற்றின் அடிப்படையில் நாட்டில் குருனாகல் மாவட்டம் குற்றச்செயல்களுக்கு ஆண், பெண் மாணவர்களுக்கு அதிகமான வாய்ப்பு நிறைந்த மாட்டமாகப் பதிவளித்துள்ளது. அங்கே தனியார் போதனை வகுப்புக்கள் காலை 6.00 மணிக்கு ஆரம்பித்து காலை 8.00 மணிக்கு விடுகின்றன. மீண்டும் பி.ப 2.00 மணிக்கே ஆரம்பிக்கின்றன. தூரப்பிரதேசங்களிலிருந்து வருகை தரும் மாணவ, மாணவியர் இந்த மிகக்கூடுதலான மணித்தியாலத்தில் நகரப் பகுதியில் வேறு வேலைகளின் றிச் சுற்றித் திரிகின்றனர். அது பலதவறுகளைச் செய்யவும், தவறுகளுக்காகப் பயன்படுத்தப்படவும் செய்கிறது.

தேசிய கல்வி ஆணைக் குழுவானது இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து பெற்ற மாணவர் துர்நடத்தை பற்றிய தகவல்களும் தேசிய ரீதியில் பின்வருமாறு காணப்பட்டது. பொலிஸ் நிலையங்களுக்கு வராமல் அதிகமான சம்பவங்கள் நடைபெற்றிருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| அட்டவணை-04 | |
|---|---|
| **பொலிஸ் நிலையம்** | **குற்றச் சம்பவம்** |
| இரத்தினபுரி | 06 |
| குருனாகல் | 03 |
| அம்பாரை | 03 |
| மாத்தளை | 03 |
| கண்டி | 03 |
| கேகாலை | 03 |
| தங்கல்ல | 03 |
| கம்பகா | 03 |
| அனுராதபுரம் | 02 |
| பண்டாரவெல | 02 |
| புத்தளம் | 02 |
| நிக்கவரெட்டிய | 02 |
| யாள்ப்பாணம் | 01 |
| **மொத்தம்** | **36** |
| **மூலம்: தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை 1991** | |

இவர்களைத் தவறாக வழி நடாத்தவெனச் சில முகவர்களும் செயற்படுவதாகப் பொலிசாரின் அறிக்கை தெரிவிக்கின்றது. போதைக்கு அடிமையாக்கல், பாலியல்சார் படங்களைக் காண்பித்தல், காதலிகளுடன் தங்குவதற்கான புகலிடங்களை வழங்குதல், போன்ற தவறான செயல்களில் இவர்கள் ஈடுபடச் செய்யப்படுகிறார்கள். அண்மையில் தனியார் போதனைக்காக வந்த 40 மாணவச் சோடிகளை சனி, ஞாயிறு தினத்தில் பொலிசார் பிடித்ததாகத் தெரிவித்தனர். எமது கல்வித் துறைப் பணியாளர்கள், பெற்றோர், ஏன் பொதுமக்களின் கண்களுக்குக் கூட இவை எட்டுவதில்லை.

கன்னங்கர அவர்களின் கல்வித் திட்டத்தின் உள்ளடக்கமானது மனவொழுக்கம், கலாசாரத்துடனான நடத்தை மாறிகள், வினைத்திறன் என்ற விடயங்களை மையப்படுத்தி இருந்தாலும் அவற்றை அரசின் கல்வித் திட்டத்தினால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. இந்த நாட்டின் கல்வி முறைமை, ஆசிரியரின் கற்பித்தற் செயற்பாடுகள், மாணவர்களின் கற்றற் செயற்பாடுகள் எல்லாமே வெறும் பரீட்சைகளாலும், பெறுபேறுகளாலும் மங்கி மடிகின்றன. அரச பாடசாலைகளில் தற்போது சிங்களத்தில் 29,21348 பிள்ளைகளும், தமிழில் 10,18724 பிள்ளைகளும் கற்பதாகவும், அவர்களுக்கு கற்பிப்பதற்காக 2,14562 ஆசிரியர்கள் பணிபுரிவதாகவும் சொல்லும் தகவல்கள் தனியார் போதனைக்குள் வெட்கித் தலைகுனிகின்றனவா? ஏன்பது எமது கல்வி முறை மீதான பாரிய வினாவாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பக் கல்லூரிகளில் புறக்கணிக்கப்பட்டுள்ள தமிழ்மொழி மூலம் பயிற்சிநெறிகள்





த.மனோகரன்

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் மொத்தமாக முப்பத்தெட்டு தொழில்நுட்பக் கல்லூரிகள் செயற்படுகின்றன. இன்று இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மேற்படி தொழில்நுட்பக் கல்லூரிகளின் பிரதான நோக்கம் பாடசாலைக் கல்வியை முழுமையாகப் பூர்த்தி செய்து பல்கலைக்கழக மட்டத்திலோ வேறு உயர்நிலைக் கல்வியையோ பெறமுடியாத மாணவ, மாணவியருக்கு சுயதொழில் வாய்ப்புக்கான வழிகாட்டலை வழங்குவதாக அமைகின்றது.

அதாவது உயர்கல்வியைப் பெறமுடியாது இடைநடுவில் பாடசாலைக் கல்வியைக் கைவிடுபவர்கள் சுயமுயற்சியின் மூலம் தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளக்கூடியதாகப் பல்வேறு தொழிற்றுறைகளில் அவர்களைப் பயிற்றுவிப்பதாயுள்ளது.

ஒன்பதாம் தரம் வரை பாடசாலைக் கல்வியைக் கற்றவர்கள் அதேபோல் பத்தாம் தரம்வரை கற்றவர்கள், கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் உயர்தர வகுப்புகளில் தொடர்ந்து கற்கும் பெறுபேறுகளைப் பெறாதவர்கள் இப்படியானவர்களுக்காகத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பல்வேறு கற்கை நெறிகள் உள்ளன.

ஆறுமாதம், ஒருவருடம் என்ற குறுகிய கால அளவைக் கொண்டதாகவுள்ள இப்பாடநெறிகளில் பயின்று, பயிற்சி பெற்று சான்றிதழைப் பெற்றவர்களுக்கு பல்வேறு துறைகளில் நல்ல தொழில் வாய்ப்புக்கள் உள்ளது மட்டுமன்றி அத்துறைகளில் ஆளணித் தேவையும் உள்ளன. உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் உள்ளது. தொழில் தகைமைசார் பயிற்சி பெற்ற சான்றிதழ் ஒரு பெறுமதிமிக்க சான்றாகக் கொள்ளப்படுகின்றது.

ஆனால், இவ்வாறான பெறுமதிமிக்க தொழிற் பயிற்சிகளையும், உரிய தகைமைசார் சான்றிதழ்களையும் தேசிய மட்டத்தில் மொழிப் பாகுபாடின்றிச் சமத்துவமாக தமிழ், சிங்களம் ஆகிய இரு சாராருக்கும் வழங்கப்படுவதில்லை என்பது கவலைக்குரியது.

முதலில் குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் தொடர்பில் அவதானம் செலுத்துவோம். பாடசாலைகளில் ஒன்பதாம் தரம்வரை கற்றவர்களுக்கான ஆறுமாத குறுகிய காலப் பயிற்சி நெறிகளாக அலுமினியப் பொருள் உருவமைத்தல், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், மரத்தளபாடப் பொருட்கள் செதுக்குதல் போன்ற துறைகளில் பயிற்சி நெறிகள் தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று பத்தாம் தரம்வரை கற்றவர்களுக்கான ஆறு மாதப் பயிற்சி நெறிகளாக வீட்டுப் பாவனை மின்னியல், இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துதல், கட்டட வர்ணம் (பெயின்ற்) பூசுதல், உலோகப் பொருள் உருவமைப்பு, வானொலி, தொலைக்காட்சி திருத்துதல், மோட்டார் வாகனம் வர்ணம் பூசுதல் ஆகிய துறைகளில் தொழில்நுட்பக் கல்லூரிக்கான பயிற்சி நெறிகளாகவுள்ளன.

ஒன்பதாம் ஆண்டுவரை கற்றவர்களுக்கான ஒரு வருடப் பயிற்சி நெறிகளாகப் பாதணி உற்பத்தி டிரக்டர் தொழில்நுட்பப் பயிற்சி, விவசாய உபகரணப் பராமரிப்பு, மற்றும் திருத்துதல் பயிற்சி என்பவற்றுடன் பத்தாம் ஆண்டு கற்றவர்களுக்கான ஒருவருடப் பயிற்சி நெறியாகப் பொறியியக் கவியாளர் பயிற்சிநெறியும் உள்ளன.

இவற்றுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கான மின்னியலாளர் பயிற்சியும், வார்ப்புத்தொழில் பயிற்சியும் ஆறு மாதப் பயிற்சி நெறிகளாயுள்ளன.

மேற்குறிப்பிட்ட ஆறுமாதப் பயிற்சி நெறிகள் பத்திற்கும் ஒருவருடப் பயிற்சி நெறிகள் நான்கிற்கும் தகைமை பெற்ற தமிழ்ப் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்ட எந்தவொரு பயிற்சி நெறியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள எந்தவொரு தொழில்நுட்பக் கல்லூரியிலும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பற்ற நிலையே காணப்படுகின்றது. குறிப்பிட்ட பாடநெறிகள் தமிழ்மொழி மூலம் பயிற்றப் படுவதில்லையென்பதே இன்றைய நிலை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கூட மேற்கூறப்பட்ட பாடநெறிகள் முழுமையாகப் பயிற்றுவிக்கப்படுவதில்லை என்ற குறை நிலவுகின்றது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறிப் பிட்ட பாடநெறிகளைத் தமிழ்மொழி மூலம் உரியபடி கற்பித்து பயிற்றுவித்து தொழில் தகைமைசார் சுயதொழில் ஆற்றும் தகைமை கொண்டோரை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழ் மக்கள் பெரும்பான்மையாக அதாவது அறுபது வீதமாக வுள்ள நுவரெலியா மாவட்டத்திலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் கூட எந்தவொரு தொழில்நுட்பப் பயிற்சி நெறியும் தமிழ்மொழியில் போதிக்கப்படுவதில்லை. அதேபோன்று தமிழ்மக்கள் செறிந்துவாழும் கண்டி, மாத்தளை, பதுளை, பண்டாரவளை, இரத்தினபுரி, கேகாலை, புத்தளம், கொழும்பு போன்ற இடங்களிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் சிங்களமொழி மூலப் போதனைகளே நடைபெறுகின்றனவேயன்றி தமிழ்மொழி மூலப் பயிற்சிக்கான ஒரு நெறியும் இல்லை.

கவலைதரும் இந்நிலை கண்டு கொள்ளப்படாமல் உள்ளமை தமிழ்க் கல்வித்துறையிலுள்ள பாரிய குறைபாடாகும். கல்வியென்பது பாடசாலைக் கல்வியையும் அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகக் கல்வியையுமே நோக்கும் மனப்பாங்கு தமிழர் மத்தியிலே வேரூன்றியுள்ளது.

இடைநடுவில் பல்வேறு ஏதுக்களால் தமது கல்வியை அதாவது பாடசாலைக் கல்வியைக் கைவிடும் பிள்ளைகளுக்கு சுயதொழில் கல்வி வழங்கப்பட வேண்டிய தேவை புரிந்துகொள்ளப்படாமலுள்ளமையும், அக்கறை செலுத்தாமலுள்ளமையும் தமிழர் சமூகத்தின் பின்னடை வுக்கான ஏதுக்குகளிலொன்றாகும். இது தமிழ்க்கல்வியில் தமிழர் கல்வியில் கவனம் செலுத்துவோர் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

உலகில் இன்று முன்னேறிய நாடுகளில் பாடசாலைக் கல்விக்கு எந்த அளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றதோ அதேயளவு முக்கியத்துவம் சுயதொழில்சார் கல்விக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. அதை நமது இலங்கை நாட்டின் கல்வியியலாளரும் புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்தப் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் தமிழ்மொழி மூலக் கல்விக் களத்தில் கருத்துடையவர்கள் சுயதொழில்சார் கல்விப் புலத்தில் அக்கறை அற்றவர்களாகவே உள்ளமை தெளிவானது.

ஒரு வைத்தியரையோ, பொறியயலாளரையோ, சட்டத்தரணியையோ அதுபோன்ற துறைசார்ந்தோரை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தும் தமிழ்க் கல்வியியலாளர்கள் சுயதொழில் துறைகள்சார் தொழில் நுட்பக் கல்வியின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிடாது அதுவும் கல்விப்புலத்தில் ஒரு அங்கமே என்பதை ஏற்று முன்னோக்கிச் சிந்திக்க வேண்டும்.

கல்வியானது ஒரு தனிமனிதனின் ஆற்றலை மேலெழுப்பி குறிப்பிட்ட துறையில் ஆற்றல், ஆளுமை கொண்டவராக ஒருவரை உருவாக்குவதேயாகும். அந்த நிலையிலிருந்து நோக்கும்போது ஒவ்வொரு தொழில்நுட்பத் துறைப் பயிற்சியும் குறிப்பிட்ட துறையில் ஒருவரது ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. ஆளுமையை மேம்படுத்துகின்றது என்பது உணரப்படுகின்றது. அத்துடன் தனது வருவாய்க் காகப் பிறரை எதிர்பார்க்கும் நிலையின்றி சுயமாகத் தனது வாழ்வை, வருமானத்தை உயர்த்திக் கொள்ளவும் வழி ஏற்படுகின்றது என்பதும் புரிகின்றது.

தமிழ்மொழி மூலக் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளமை பகிரங்கமானது. அதிலும் குறிப்பாக மலையகப் பெருந்தோட்டப் பகுதித் தமிழ் மாணவ, மாணவியர் பெற்றுக்கொள்ளும் கல்வியானது ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும்போது மிகவும் பின் தங்கியே காணப்படுகின்றது. இதில் புதிதாக ஆய்வு செய்வதற்கெதுவுமில்லை.

இன்று மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி மலையகத் தமிழ் அரசியல்வாதிகளும், தொழிற்சங்க வாதிகளும், ஏன் சில கல்வியியலாளர்களும் கூட குறிப் பிடுகின்றனர். கோரிக்கை விடுகின்றனர். மலையகத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரான கண்டியை அண்மித்த பேராதனை யில் ஒரு பல்கலைக்கழகம் பலதசாப்தங்களாக இருப்பதும் அதில் தமிழ்மொழி மூலம் சகல துறைகளுக்குமான கற்கை நெறிகள் உள்ளமை யும் ஆனால், மலையகத்திலிருந்து அடிப் படைக்கல்வி ஆட்டங் கண்ட நிலையில் தமிழ்க்கல்வி உள்ளமையால் பல்கலைக்கழகத் திற்குத் தமிழ்ப் பிள்ளைகள் உள்வாங்கப்படும் நிலை அரிதாகவே உள்ளமையும் எவருக்கும் புரியாததல்ல.



தரமான கல்வியைப் பெற்று மலையகத் தமிழ்ப் பிள்ளைகள் உயர்கல்வியை, பல்கலைகழகத் தோடு, இணைந்த கல்வியைப் பெற கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டும். இதை மூடிமறைக்காது ஆக்கபூர்வமாகப் பொறுப்புடன் அவதானித்து தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இது மலையகத் தமிழ்க்கல்வி, தமிழர் கல்வியில் அக்கறை கொண்டோரின் தவிர்த்தொதுங்க முடியாத பொறுப்பு.

அதேவேளை, பாடசாலைக் கல்வியை இடை நடுவில் அதாவது ஒன்பதாம், பத்தாம் தரங்களுக்கு மேல் தொடர முடியாத பிள்ளைகளுக்கு, உயர்தர வகுப்புகளில் தொடர்ந்து பயிலத் தகைமை பெற முடியாது போன மாணவர்களுக்கு வழிகாட்டி நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு, தொழிற் கல்வியைப் பெற்றுக்கொள்ள வழிவகை, வசதிகள் செய்துகொடுக்க வேண்டிய பொறுப்பு மலையகத் தமிழ் அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதி கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக சிந்தனை யாளர்களுக்குள்ளது. இது தட்டிக் கழிக்க முடியாத சமூகக் கடமை, பொறுப்பு.

பல்வேறு காரணங்களாலும், பொருளாதார பிரச்சி னைகளாலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதி களிலுமுள்ள பிள்ளைகள் பலர் உயர்கல்வியைத் தொடர முடியாது இடைநடுவில் கைவிடும் நிலையிலுள்ளனர். அதேபோல் உயர்கல்விக்குரிய பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இடைநிலைக் கல்வியுடன் தமது கல்வியை நிறுத்திக்கொள்ளும் நிலையிலும் அநேகர் உள்ளனர்.

இவ்வாறானவர்கள் தொடர்பில் உரிய, போதிய கவனம் செலுத்தாது விடுவது எல்லோருக்கும் கல்வி என்ற உயரிய கோட்பாட்டின் சறுக்கலாகவே அமையும்.

சுயதொழில் முயற்சிக்கு வழிகாட்டும் தொழில்நுட்பக் கல்வியானது சொந்தக்காலில் நின்று வருமானத்தை ஈட்டிக்கொள்ள, வாழ்வில் உறுதியை வழங்க சமூகத்தில் ஒரு அந்தஸ்தை ஏற்படுத்திக் கொள்ளும் பெறுமதி கொண்டது என்பதை தெளிவுறுத்திக்கொள்ள வேண்டி யது கல்வித்துறையிலும், சமூக முன்னேற்றத்திலும் ஆர்வமுடையோர் பொறுப்பாகும்.

பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாதோரை வழிப்படுத்தி தொழில்நுட்பக் கல்லூரிகளில் இணைத்து பயிற்சி பெறச் செய்ய, அதற்கான ஆலோசனைகளை வழங்கப் பாடசாலைகளை மையப்படுத்தி தொழில்நுட்பக் கல்லூரியின் அதற்கான அலுவலர்கள் செயற்படுவதும் தெரிகின்றது. அது சிங்களமொழி மூலக்கற்கை நெறிகளுக்கு மட்டுமே.

அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் மேற்படி தொழில்நுட்பப் பாடப் பயிற்சிநெறிகள் தமிழ்மொழி மூலம் நடத்தப்படாமையால் தமிழ்மொழி மூலம் கற்ற பிள்ளைகள் தமக்குரிய, தொழில்நுட்பக் கல்விகற்கும் உரிமையை இழந்துள்ளனர். தொழிற்கல்வி தொடர்பான நலன்களைத் தமிழ்மொழி மூலம் அடைய முடியாதுள்ளது.

தரமான, பல்துறைகளில் பயிற்சிபெற்ற தொழி லாளர்களை உருவாக்கும் களங்களாகத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருந்தபோதும் தமிழ்மொழி மூலப் பயிற்சிகளின்மையால் தமிழ்மொழி மூலம் கல்வியைப் பெற்ற பிள்ளைகளின் வாய்ப்பு இழக்கப்பட்டுள்ளது.


தேசிய மட்டத்தில் மொழிரீதியாகச் சமத்துவமாக கல்வி வழங்குவது என்பது நமது நாட்டின் கல்விக் கொள் கையாகும். அது தொழில்நுட்பக் கல்வி தொடர்பினும் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும். நாட்டின் கல்வித்துறையில் தொழில்நுட்பக் கல்வியும் ஒரு அங்கம் என்பதும் தமிழ்மொழி மூலமும் அக்கல்வி போதிக்கப்பட் வேண்டும் என்பதும் புறந்தள்ள முடியாதவை என்பது பொறுப்புள்ளவர்களுக்கு உணர்த்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு ஜவஹர்ஷா





**?** *அதிபர் வகுப்பு ஒன்றைச் சேர்ந்த நான் இப்போது அதாவது 01.06.2012 தொடக்கம் 36,480 ரூபாவை அடிப்படைச் சம்பளமாகப் பெற்று வருகின்றேன். எனக்கு 2006.06.01 தொடக்கம் சீராக்கல் படியாக 630 ரூபாவே கிடைத்து வருகின்றது. சிலருக்கு இதைவிட அதிகமாகக் கிடைக்கின்றது எனக்கு எவ்வளவு சீராக்கல்படி கிடைக்க வேண்டும்?*

பல கல்வி வலயங்களில் பலவாறு இப்படி வழங்கப் பட்டு வருகின்றது. இது தொடர்பாக சில மாதங்களுக்கு முன்னர் ஆசிரியத்தில் விரிவான கட்டுரையொன்று வெளியாகி இருந்தது. கல்வி அமைச்சின் செயலாளரின் 2008.07.21 இலக்கச் சுற்றறிக்கைப்படியும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைபடியும் உங்களைப் போன்றவர்களுக்கு பல கல்வி வலயங்கள் பின்வருமாறு வழங்குகின்றன.

| திகதி | சம்பளம் | சீராக்கல்படி |
|---|---|---|
| 2006.06.01 | 32,310/- | 420/- |
| 2007.06.01 | 33,255/- | 910/- |
| 2008.06.01 | 33,900/- | 980/- |
| 2009.06.01 | 34,545/- | 1,050/- |
| 2010.06.01 | 35,190/- | 1,120/- |
| 2011.06.01 | 35,835/- | 1,190/- |
| 2012.06.01 | 36,480/- | 1,260/- |

என்றவாறே கிடைக்க வேண்டும். பொது நிருவாக அமைச்சு, தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றின் முன்னுக்கு பின் முரணான சுற்றறிக்கை யால் எல்லாம் குழம்பிப் போய் இருக்கின்றது. மேல் சொல்லப்பட்ட சுற்றறிக்கையை இரத்துச் செய்து, புதிய சுற்றறிக்கை வெளியிட அறிவித்தல் வந்துள்ளது. அது வெளியானால் நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கும் சீராக்கல்படி கூட 490 ரூபாவாக குறைய வாய்ப்புண்டு. ஆகையால் இதற்கு உரிய விளக்கமொன்றைத் தரமுடியாதுள்ளது.

**?** *ஆசிரியராகிய நான் 2008.06.01 இல் கல்விமாணி பட்ட கற்கை நெறியினை (Bed) பூர்த்தி செய்துள்ளேன். இச்சான்றிதழை பதவி உயர்வுக்குப் பயன்படுத்த முடியுமா? கல்வி வலயத்தில் இதற்கான சுற்றறிக்கைகள் இல்லையென்று சொல்கின்றார்கள். 2008.01.04 திகதி தொடக்கம் இலங்கை ஆசிரியர் சேவையில் இரண்டாம் வகுப்பு முதலாம் தரத்தில் உள்ளேன். இக் கற்கை நெறியினை பூர்த்தி செய்ததினால் முதலாம் வகுப்புக்குச் செல்ல முடியுமா? தயவுசெய்து இதற்கான பதிலையும் விளக்கத்தையும் எதிர்பார்க்கின்றேன்.*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

3ஆம் வகுப்பு 1ஆம் தரத்தில் நீங்கள் இருந்தால் கல்விமாணிப் பட்டத்தால் இரண்டாம் வகுப்பு இரண்டாம் தரம் கிடைத்திருக்கும். இதற்குப் பின்னர் தற்போது உள்ள சுற்றறிக்கைகளின் படி உங்களது பட்டச் சான்றிதழால் பதவி உயர்வு கிடைக்கமாட்டாது. 2008.01.04 திகதியில் இருந்து ஐந்து வருடம் நிறைவு செய்தால் மட்டுமே முதலாம் வகுப்பு கிடைக்கும்.

ஆனால் கல்வியமைச்சின் - ஆசிரியர் தொழிற்சங்கங் களின் கயிறு இழுப்பால் தாமதமாகிவரும் புதிய பிரமாணக் குறிப்பு சட்டமாகி, சுற்றறிக்கை வெளியிடப் பட்டால் உங்களைப் போன்ற பயிற்றப்பட்ட பட்டதாரிகள் இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னரே முதலாம் வகுப்புக்குச் சென்று விடுவார்கள். இப்போதுள்ள சுற்றறிக்கையின் காலக்கெடு 2010.12.31 உடன் முடிவடைவதால் அதற்கு பிறகு சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்கின்றவர்கள் பதவி உயர்வு பெற வாய்பில்லை. *06/2006 (Viii)* இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை புதிய பிரமாணக் குறிப்புடன் வெளிவந்தால் மட்டுமே ஆசிரியர் சேவையினருக்கு புதிய விமோசனம் கிடைக்கும் அதுவரை பொறுத்திருக்க வேண்டியுள்ளது.

**? *இலங்கை அதிபர் சேவை முதலாம் வகுப்பைச் சேர்ந்த நான் 2009.10.01 தொடக்கம் ஓய்வு பெற்றுள்ளேன். 2007ஆம் ஆண்டுக்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு இரண்டு சம்பள ஏற்றங்களை வழங்கச் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாக அறிகின்றேன். இதன் விபரத்தைத் தரமுடியுமா?***

*28/2010* இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை யில் உள்ள இரண்டாம் கட்ட அறிவுறுத்தல்களில் 2011.07.01 தொடக்கம் அரசாங்க ஊழியர்களின் ஒரு பகுதியினருக்கு சம்பளமாற்றத்தை வழங்க அறிவுறுத்தல் கள் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப் பட்டுள்ள 28/2010(I) இலக்கச் சுற்றறிக்கையில்தான் நீங்கள் கேட்கும் 2007.06.01 தொடக்கம் 2011.06.30 வரையில் ஓய்வுபெற்றவர்களுக்கு இந்த அனுகூலத்தை வழங்கும் அறிவுறுத்தல் உள்ளது. இது 06/2006 (IV) இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையால் பாதிக்கப் பட்டவர்களுக்கே நிவாரணம் வழங்குகின்றது. பதவி நிலை சாராத அரச ஊழியர்களும், இலங்கை ஆசிரியர் சேவையின் 3-II, 3-I , 2-II , 2-I தர ஆசிரியர்களும் இலங்கை அதிபர் சேவையில் 2-II, 3 வகுப்பு அதிபர்களுமே பாதிக்கப்பட்டவர்களாவர். மற்றைய தர வகுப்பு அதிபர், ஆசிரியர்களுக்கு பாதிப்பு உண்டாகாதபடியால் உங்களைப் போன்றவர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு கிடைக்கமாட்டாது.

**? *1982.04.21 அன்று தராதரப் பத்திரமற்ற ஆசிரியராக நியமிக்கப்பட்ட நான் 1987.03.01 தொடக்கம் பயிற்சிச் சான்றிதழைப் பெற்றுள்ளேன். 1990-1991 காலப்பகுதியில் சம்பளமற்ற லீவு பெற்று வெளிநாடு சென்று பின்னர் சேவையில் சேர்ந்து பணியாற்றி வருகின்றேன். எனக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பு பதவி உயர்வு எப்போது கிடைக்கும் என்பது பற்றியும், சம்பளம் எவ்வாறு அமையும் என்பது பற்றியும் விளக்கம் தர முடியுமா?***

உங்களின் தகவலின்படி உங்களுக்கு இப்போதே பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். அதைச் சரிபார்க்கவே இந்தக் கேள்வியைக் கேட்டு இருப்பதாக எண்ணுகின்றேன். பலருக்கும் இவ்வாறான சந்தேகங்கள் இருப்பதால் பின்வருமாறு அதை விளக்க முடியும்.

1987.03.01 தொடக்கம் பயிற்றப்பட்ட ஆசிரியராக இருப்பதால் 2007.03.01 தொடக்கம் முதலாம் வகுப்பு பதவி உயர்வு கிடைக்க வேண்டும். 1982.04.21 தொடக்கம் 1987.02.28 வரையிலான பயிற்றப்பட்ட ஆசிரியர் சேவைக் காலத்துக்கு இரண்டு புள்ளிகள் இருந்தாலும் நீங்கள் இரண்டு வருடம் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளபடியால் அதற்கு அப்புள்ளிகள் கழிக்கப்பட்டு விடும். 2007.03.01 தொடக்கம் உங்களுக்கு பின்வருமாறு சம்பளம் கிடைக்க வேண்டும்.

| திகதி | சம்பளம் |
|---|---|
| 2007.03.01 | 21,345/- |
| 2007.06.01 | 21,645/- |
| 2008.03.01 | 22,290/- |
| 2009.03.01 | 22,935/- |
| 2010.03.01 | 23,580/- |
| 2011.03.01 | 24,225/- |
| 2012.03.01 | 24,870/- |

**? *நான் பிரதி அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் சேவையாற்றும் முஸ்லிம் ஆசிரியையின் கணவர் காலமாகிவிட்டார். சரியாக சுற்றறிக்கை தெரியாதபடியால் "இத்தா" லீவை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு விளக்கம் தர முடியுமா?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்தா" விசேட லீவு தொடர்பாக 2007.05.23ஆம் திகதி 11/2007 இலக்கச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பின்வருமாறு அந்த லீவைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட வருடத்திலும், அந்த ஆசிரியையின் முழு சேவைக் காலத்திலும் மிகுதியாக உள்ள அமய லீவைப் பெற்றுக்கொள்ளலாம். அது போதுமானதாக இல்லாவிட்டால் மிகுதி நாட்களுக்காக அரைச் சம்பளத்துடன் லீவைப் பெற்றுக்கொள்ளலாம்.

**?** ***எனது மனைவிக்கு குழந்தை கிடைத்து இரண்டு வாரமாகிவிட்டபடியால் தந்தைக்குரிய லீவான மூன்று நாட்களைத் தரமுடியாது என எங்கள் பாடசாலை அதிபர் மறுப்புத் தெரிவிக்கின்றார். எனக்கு இந்த லீவைப் பெற்றுக்கொள்ள முடியுமா?***

சில பாடசாலை அதிபர்கள் சுற்றறிக்கைகளைத் தேடிப் பார்க்காமல் அல்லது சரியாக படிக்காமல் இவ்வாறு அடம்பிடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

இதற்காக, 2006.03.02 திகதி வெளியிடப்பட்டுள்ள 03/2006 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் உள்ள கீழ்வரும் விபரங்களின்படி லீவு உரியதாகும்.

இந்த லீவை குழந்தை பிறப்பில் இருந்து மூன்று மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். லீவை வேண்டும் உத்தியோகஸ்தர் தமது விவாவகச் சான்றிதழையும், குழந்தை பிறப்பு தொடர்பான வைத்தியச் சான்றிதழை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்து இந்த மூன்று நாட்கள் லீவைப் பெற்றுக்கொள்ளலாம்.

**?** ***நான் சேவையில் இருந்தபோது விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்குப் பணம் அறவிடப்படவில்லை. இப்போது செலுத்தலாம் என்று கூறுகின்றார்கள். உண்மையா?***

நீங்கள் ஆசிரியராக இருந்தால் நிச்சயமாக அதைச் சம்பளத்தில் வெட்டி இருப்பார்கள். ஆசிரியையாக இருந்தால் இதில் மீண்டும் சேர்வதற்கு 2001.07.04 திகதிய 13/2001 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. 1983.08.01 திகதி தொடக்கம் ஓய்வு பெற்ற திகதிவரை செலுத்த வேண்டிய பணத்தை 180 தவணைகளில் கட்டலாம். அல்லது தேவையைப் பொறுத்து உங்களது மறைவுக்குப் பின்னர் கணவரோ 26 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளோ ஒரே முறையில் செலுத்தி இதன் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.



அரசாங்கம் உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கும் ஓய்வூதியத்திற்கு மாதாமாதம் சம்பளத்தில் கழிப்பதில்லை. உத்தியோகத்தரின் மறைவுக்குப் பின்னர் அவரின் துணைவியாருக்கு அல்லது துணைவருக்கு அல்லது தகைமையுள்ள பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு வழங்குவதற்காகவே பணம் அறவிடப்படுகின்றது. இதில் சேர்வதற்கான கால எல்லை பலமுறை நீடிக்கப்பட்டு கடைசியாக 2012.12.31 வரை இறுதித்திகதி குறிக்கப்பட்டுள்ளது.

எனக்குத் தெரிந்த ஒரு ஊழியர் ஆசிரியையான மனைவி இறந்த பின்னர் அதுவும் பத்து வருடம் கழிந்த பின்னர் மேற்படி சுற்றறிக்கைப்படி பணத்தைச் செலுத்தி இறந்த திகதியில் இருந்து நிலுவையுடன் இந்த ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றார். இரண்டு ஓய்வூதியங்கள் கிடைக்கின்றன.

**?** ***ஆசிரியர்களுக்கு வைத்திய லீவைவிட வேறு விசேட நோய் தொடர்பாக லீவுகள் எதுவும் உள்ளதா?***

சில நோய்களுக்காக சம்பளமற்ற லீவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். கச நோய்க்காக ஒருமுறை ஒன்பது மாதங்களின்படி இரண்டு முறை பெற்றுக்கொள்ளலாம். இரண்டு முறை லீவு பெற நான்கு வருடங்கள் கடந்து இருக்கவேண்டும். யானைக்கால் வியாதிக்காக 22 மாதங்களும், புற்று நோய்க்காக 6 மாதங்களும் சம்பளத்துடன் லீவைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான வைத்தியச் சான்றிதழ்கள் அவசியமானதாகும்.

பரவும் நோய்களாகக் கருதப்படும் கொலரா, மகாமாரி, டைப்பஸ் போன்ற நோய்களுக்கும் நோயாளியை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைக்க வேண்டிய நோய்களுக்கும் விசேட லீவுகள் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகம்




*விலை:1200.00*

# CHEMAMADU BOOK CENTRE

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2321905 Fax: 011-2448624
E-Mail:chemamadu@yahoo.com, chemamadu50@gmail.com,
Website:www.chemamadu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியம்
## தொடர்புகளுக்கு...

**யாழ்ப்பாணம்**

புக்லாப் (ரவீந்திரன்) ..021-2227290/077-1285749
பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்) 021-2226693
பரணி புத்தகக் கூடம் ... 077-5991949
மா.மோகனகிருஷ்ணன் ....075-0710602

**மட்டக்களப்பு**

கி.புண்ணியமூர்த்தி ..077-7034528/065-2250114
ச.ஜெயராஜா ....065-2225812/077-7249729
ராஜாஸ் புத்தகநிலையம் ....065-2222371

**மன்னார்**

ஜோதி புத்தக நிலையம் ....023-2222052
டி.கிறிஷ்டிராஜ் ....071-2261010

**மூதூர்**

க.கனகசிங்கம் ....077-8730736

**கிளிநொச்சி**

பெருமாள் கணேசன் ....077-0789749

**முல்லைத்தீவு**

வேல் நந்தகுமார் ....077-9297479

**ஓட்டமாவடி**

எம்.பி.டி.கான் ....077-9068898

**மாவனெல்லை**

எம்.ஏ.எம்.நிஸ்தார் ....071-8257562

**புஸ்ஸல்லாவை**

ஜி.லோகேஸ்வரன் ....077-9706564

**ஹட்டன்**

முரளி புத்தக நிலையம் ....051-7911571

**அக்கறைப்பற்று**

டி.கணேசரட்ணம் ....071-3914771/067-2277192

**வவுனியா**

தா.அமிர்தலிங்கம் ...071-8457290
ஆ.விஜேந்திரன் ....077-4412518
சி.ரமேஸ் ...077-4744810
சு.பரமானந்தம் ....071-8457260
அறிவாலயம் புத்தக நிலையம் ....024-4920733
கஜன் புத்தகசாலை ....077-1615150

**கொழும்பு**

சேமமடு பொத்தகசாலை ....011-2472362
பூபாலசிங்கம் புத்தகசாலை ....011-2504266
சங்கர் புத்தகசாலை ....077-7732160
நிவ் கோகிலம் புத்தகசாலை 077-5941031

**திருகோணமலை**

இ.புவனேந்திரன் ....026-2222426
ச.தேவசகாயம் ....026-2227345

**கிண்ணியா**

எம்.எஸ்.எம்.ஹனீபா ....077-2344586

**அனுராதபுரம்**

அன்பு ஜவஹர்ஷா ....071-0881950

**அம்பாறை**

அமீர் அலி ....077-2224025

**கல்முனை**

அன்பு புத்தக நிலையம் ....077-6446046

**கண்டி**

ஈஸ்வரன் புத்தகசாலை ....077-7663709

**பண்டாரவளை**

பி.புண்ணியமூர்த்தி ....077-1155609

**நுவரெலியா**

குமரன் புக் சென்டர் ....052-2223416

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org